

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

புரட்டாசி - ஐப்பசி
செப்டம்பர் - 2019

மலர் 8 இதழ் 9

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 11 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| திருக்குறள் நூற்றெட்டு | 14 |
| இராமாவதாரம் எதற்காக | 16 |
| புரட்டாசி மாத விசேஷ தினங்கள் | 19 |
| தமிழ் பாகவதம் | 20 |
| ஸ்ரீ சிந்துநதி மஹாத்மியம் | 22 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 16 | 26 |
| புராணக்கதை | 27 |
| வேதாந்த ஸாரம் | 29 |
| ருத்ர கீதை | 30 |
| த்ரிபுரஸுந்தரி பாதத்ஸ்தவம் | 32 |
| பித்ரார்ஜிதம் | 33 |
| மகாபாரத சுருக்கம் | 34 |
| ஹிந்து மத - ப்ராமண நூல்கள் | 37 |
| க்ருஷ்ண லீலா தரங்கிணி | 39 |
| அன்னதானத்தின் மகிமை | 43 |
| அஜாமிளர் | 44 |
| காமகோடி ப்ரதீபம் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## தேவை ஆத்ம குணங்கள் 1

நமது இந்து மதத்தில் அதாவது ஸனாதன தர்மத்தில் சடங்குகள் தான் உள்ளன. எப்போது பார்த்தாலும் சடங்குகள். அவையே இந்த மதத்தினை கோலோச்சுகின்றன. தினம் செய்யும் கர்மாக்கள், மாதம் செய்யும் கர்மாக்கள் வருஷத்தில் செய்யும் கர்மாக்கள் என்று மக்களை அடிமைபடுத்திவைத்துள்ளது. HUMAN VALUES என்பதன் பக்கமே போகவில்லை என்று மேனாட்டு விமர்சகர்கள் விமர்சிப்பர்.

இதை நம் நாட்டு மேதாவிகளும் ஆமோதிப்பர். சற்று விசாரிப்போம். தர்மஸாஸ்த்ரங்கள் பலவிதமான கர்மாக்களைக் கூறுகின்றன. 40 ஸம்ஸ்காரங்கள் கூறப்படுகின்றன. கர்பாதானம் முதல் அந்த்யேஷ்டி வரை ஒரு ஜீவனை சுத்தப்படுத்துவதற்கு முக்ய காரணமாகின்றன. இதில் தனக்கும், பிள்ளைக்கும், பிள்ளை பெற்றோருக்கும் செய்யும் சடங்குகள் அடங்கும்.

40 ஸம்ஸ்காரங்கள் இல்லாவிட்டாலும் 16 ஸம்ஸ்காரங்கள் எல்லா ஜாதியினருக்கும் பொதுவானவை. இவைகளைப் பார்த்தால் நமக்கே குணங்களை விட்டு சடங்குகள் முக்யமா என்று ஐயம் எழும். நம் சாஸ்த்ரங்கள் அவ்வளவு பாரபக்ஷமானவையா. கொஞ்சம் ஊன்றிப் பார்த்தால் இவ்வளவு ஸம்ஸ்காரங்களைச் சொல்கின்ற சாஸ்த்ரங்கள் ஸத் குணங்களைச் சொல்கின்றன.

***“த்ருதி: க்ஷமா தமோஅஸ்தேயம் சௌசம் இந்த்ரிய நிக்ரஹ:***
***தீ: வித்யா ஸத்யம் அக்ரோத: தசகம் தர்ம லக்ஷணம் “ ॥***

உறுதி, பொறுமை, மனவடக்கம், திருடாமை, சுத்தம், புலனடக்கம், நூல்களைக் கற்றல், கல்வி, உண்மை கோபமின்மை இந்த பத்தும் தர்மலக்ஷணம் என்று மனு கூறுவார். நாட்டிலேயே அதிகம் விமரிக்கப்படுபவர் மனு. இவர் கூறும் பத்து குணங்கள் எல்லாருக்கும் பொதுவானவை.

உலகப்பொதுமறை தந்த திருவள்ளுவரும் சாஸ்த்ரங்கள் அறிந்தவர் தான். தன் நூலில் மக்கள் அறத்தின்பால் ஒழுகவேண்டும் என்று சங்கல்பித்தவர். human values என்று சொல்லப்படும் குணங்களை கற்பித்தவர். உபனிஷத்துகளின் ஸாரமாகிய பகவத் கீதை தத்வ விசாரம் செய்தாலும் ஆத்ம குணங்களை விடவில்லை.

***''அத்வேஷ்டா ஸர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச***
***நிர்மமோ நிரஹங்கார: ஸமதுக்க ஸுக க்ஷமீ***
***ஸந்துஷ்ட: ஸததம் யோகீ யதாத்மா த்ருட நிஸ்சய:***
***மய்யர்பித மனோ புத்திர்யோ மத்பக்த: ஸ மே ப்ரிய:''***

எந்த ப்ராணியையும் வெறுக்காதிருத்தல், நட்பு, காருண்யம், அஹங்காரம், மமகாரம் இல்லாதிருத்தல், துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகப் பாவிக்கிற மகிழ்ச்சி, தன்னடக்கம் இக்குணங்களைக் கொண்ட யோகீ எனக்குப் ப்ரியமானவன்.

பகவான் பெரும் தத்வத்தை சொல்லும் போது இந்த குணங்களை ஸ்லாகிக்கிறார். அதே போல் நம் தர்மஸாஸ்த்ரங்கள் பலவிதமான கட்டுப்பாடுகளை விதித்தாலும், சடங்குகளைச் செய்யச் சொன்னாலும் பல்விதமான குணங்களைக் கூறுகின்றன. பலவிதமான சடங்குகளைச் செய்தாலும் ஆத்மகுணங்கள் இல்லாமல் பலனளிக்கா. சடங்குளைச் சொல்வதும் சாஸ்த்ரங்கள்தான், ஆத்ம குணங்களைச் சொல்வதும் சாஸ்த்ரங்கள்தான். அவை எட்டு ஆத்ம குணங்களை ஸ்லாகித்துப் பேசும் Human values என்று சொல்லப்படுபவை இந்த 8 ஆத்ம குணங்கள் தான்.

***''தயா க்ஷாந்தி அனஸூயா சௌசம் அனாயஸம் மங்களம்***
***அகார்ப்பண்யம் அஸ்ப்ருஹா ஏதே அஷ்ட ஆத்மகுணா:கீர்திதா:'' ॥***

ஒரு மனிதன் எவ்வேலையைச் செய்தாலும் இந்த ஆத்ம குணங்கள் தேவை. இது எல்லா மனிதருக்கும் பொருந்தும். இந்த எட்டு ஆத்ம குணங்களைப் பற்றி விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீசரணார்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



हतो वा प्राप्यसे स्वर्गं जित्वा वा भोक्ष्यसे महीम् ।
तस्मादुत्तिष्ट कौन्तेय! युद्धाय कृतनिश्चय: ।। 2.37.

என்ற 37வது ச்லோகத்தில் தத்வ விசாரத்தை விட்டு ஸாமான்யமான, தன்மானமுடைய, ஒரு மனிதனை அந்நிலையிலேயே உத்ஸாகப் படுத்தித் தட்டி யெழுப்புகிறார்.

அவன் கடமை, அவன் குலத்தின் மானம், அவனது தன்மானம், மறுமையிலேற்படும் கௌரவம் இவைகளையெல்லாம் வற்புறுத்தி "நீ போரிலிருந்து பின் வாங்குவது தவறு" என்கிறார் பகவான்.

துக்கமென்பதையே அடியோடு களைவது கீதையின் நோக்கம். அவ்விதம் அதைக் களையக் கூடியது ஞானமொன்றே. ஒரு விஷயத்திலோ, ஒருவரிடத்திலோ ஒரு பற்றுண்டாகும்போது அதற்கு ஒரு கேடுவிளையும் போல் தோன்றினால் நமக்கு துக்கம் உண்டாகிறது. "ஆத்மாவென்னும் ஒரே வஸ்து எங்கும் நிறைந்தது. அது ஒன்றே உண்மையான வஸ்து, மற்றவையெல்லாம் தோற்றமேயொழிய உண்மையில்லை" என்ற உண்மை அனுபவம் ஒருவருக்கேற்படும் போது தன்னைச் சேர்ந்த பொருள் மற்றொன்றிருக்கிறது என்ற எண்ணமோ, ஒருவன் பிறக்கிறான் அல்லது சாகிறான் என்ற எண்ணமோ ஏற்படுவதற்கிடமில்லை - உண்மையிலிருப்பது ஒரே பொருளானதாலும் அது பிறப்பு, சாவு இல்லாது எப்பொழுதும் எங்கும் நிறைந்திருப்பதாலும் - உண்மைக்கு மாறாக நாம் நினைப்பதெல்லாம் மோஹம்.

नासतो विद्यते भाव ।। 2.26.

ஸத்தெனும் ஆத்மாவைத் தவிர மற்ற எதுவும் உண்மையில்லை. இரண்டாவது வஸ்து இருப்பதாகத் தோன்றும் பொழுதே பற்று ஏற்படுகிறது. பற்றின் மூலமாக சோகமேயேற்படுகிறது. இரண்டாவது வஸ்து தோற்றமே, உண்மையிலில்லையெனும் ஆத்மக்ஞானம் ஒன்றே சோகத்தை வேரோடு களையக் கூடியது. உண்மையாகவுள்ள எங்கும் நிறைந்த ஒரே பொருளே தோன்றும் ஒவ்வொரு உடலிலும் நான் என்னும் அறிவாய் நிற்பது, நீ அவன் என ஒவ்வொரு உடல் தோற்றங்களில் அறிவாய் விளங்கும் வஸ்துவும் அந்த நானெனும் ஒரே வஸ்துவே. அவ்வொரு உண்மையான வஸ்துவே எக்காலத்தும் எங்கும் நிறைந்துள்ளதால் அதற்குச் சாவெனும் அழிவேயிருக்க முடியாது.

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।। (13.3)

(எல்லாவுடல்களிலும் அறிவாய் நிற்பவன் நானேயென்று தெரிந்து கொள் என்பது பகவானுடைய வாக்யம்)

अविभक्तं विभक्तेषु विभक्तमिवचस्थितम् ।।

வெவ்வேறாகப் பிரிந்துள்ள தேகங்களில் பிரிந்து வெவ்வேறாக நிற்பவனைப் போல் தோன்றிக் கொண்டிருந்தும் உண்மையில் பிரிவே யில்லாது ஒரே பொருளாயிருப்பவனே ஆத்மா. ஆதலின் அவன் சாகிறான் அவனை நாம் கொல்லுகிறோம் எனும் எண்ணம் உண்மையறியாதலால் ஏற்பட்ட மோஹம்.

அம்மோஹமே சோகத்திற்குக் காரணமாகிறது. இந்த சோகமே அர்ஜுனனைப் போரிலிருந்து பின் வாங்கச் செய்கிறது. உலகத்தில் ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு அசட்டுக் கார்யத்தைச் செய்யும்படி தூண்டுகிறது. அசட்டுக் கார்யத்தினால் கூட ஒருவருக்கும் ஒன்றும் நஷ்டமில்லை. அகண்ட, ஆனந்தமாக இருக்க வேண்டிய ஆத்மா அழுது கொண்டிருப்பது தான் பெரும் நஷ்டம். ஆத்மாவின் அழுகையை ஆத்ம தத்வத்தை விளக்குவதின் மூலம் அகற்றுவதே கீதையின் பணி.

---

*காமம், குரோதம், பயம், சோகம் இவைகளின் காரணமாக எந்த கார்யத்தையும் ஒருவன் செய்தால் அதுவே பாபம் என்பது பகவானுடைய மதமாகத் தோன்றுகிறது. இவைகளின் காரணமில்லாமல் எந்தக் கார்யம் நடந்தாலும் அந்தக் கார்யத்தை பகவான் கண்டிருத்திருக்க மாட்டார். அர்ஜுனன் யுத்தத்திலிருந்து பின்வாங்குவதென்பது சோகத்தின் காரணமாக ஏற்பட்ட கார்யமாகையால் அதைக் கண்டிக்கிறார். அந்தக் கார்யத்தைக் கண்டிப்பது கூட முக்கிய உத்தேசமில்லை. அதன் காரணமாக சோகத்தையே அடுத்தடுத்துக் கண்டிக்கிறார். சோகத்தை ஞானத்தால் துடைத்து விட்டால் யுத்தத்தினின்று பின் வாங்குவதென்னும் அச்சோகத்தின் கார்யம் தானாகவே விலகிவிடுகிறது. ஹிம்சையாயினும் அதற்குக் காரணம் காமம், க்ரோதம், இவைகள் ஆகாத போது அது பாபமாகாது. பைத்தியம் பிடித்து ஊராருக்கு கஷ்டத்தை விளைவிக்கும் தன் பிள்ளையைச் சங்கிலியிடுவது நீதிபதி குற்றவாளியைத் தண்டிப்பதும் பாபமாகாது. ஆகையால் பற்று, பகை, துயரம், அச்சம் இவைகளை உண்மை ஞானத்தால் ஒழிப்பதே பகவானுடைய தாத்பர்யம்.*

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## முனிவரின் காக்கை

*''தவறு செய்யாதவர் உலகில் எவருமில்லை. பிறரது குறைகளை மட்டும் கவனியாதே. நிறைவையும் பார். குற்றம் பார்க்கின் சுற்றமில்லை.f*



விரஜா் என்ற முனிவர் காட்டில் தவமிருந்தார். காக்கையும், குருவியும், மானும், முயலும் அவரிடம் அன்புடன் பழகி வந்தன. ஒருநாள் ரஜகன் என்ற காக்கை அவரை அணுகியது. ஒருவரைப் பார்த்தவுடனே அவர் எத்தகையவர் என்பது அது கூறிவிடும். நடந்ததையும், நடக்கவிருப்பதையும் கூறும் அந்த அதிசயக் காக்கையை நட்புடன் வளர்த்தார். முனிவருக்கு ''அரசவைக்கு அதனை எடுத்துச் சென்று அரசனுக்கு வருங்காலம் உரைப்போம். சன்மானம் பெறுவோம்,'' என்ற ஆசை வந்தது.

அரசன் சபைக்கு முனிவர் வந்தார். ''இந்தக் காக்கை திரிகாலஞானி. மனிதனின் உள்ளத்திலுள்ளதைச் சொல்லும். அவன் நல்லவனா, கெட்டவனா என்று நொடியில் விளக்கி விடும். அரசே! இதனைச் சோதித்துப் பாருங்கள் '' என வேண்டினார். தமது மந்திரிகளும் சேநாபதி முதலானோரும் நம்பிக்கைக்கு உரியவரா என அரசர் அறிய முற்பட்டார். அவர்களை ஒவ்வொருவராக அழைத்து முனிவரது காக்கையின் முன் நிறுத்தினார்.

காக்கை அழுகியதையும், நாற்றமுள்ளதையும் பெரிதும் விரும்பும். காக்கையின் இயல்பு அது. அரசரின் சபையில் புகழ்பெறும் ஆசை அதன் இயல்பைத் தூண்டியது. பிறரது குறைகள் மட்டுமே அதன் கண்ணில் பட்டது. இவன் உள்ளதை மறைப்பவன்; இவன் பிறர் பொருளுக்கு ஆசைப்படுபவன்; இவன் ஏமாற்றுபவன் என ஒவ்வொருவரிடமும் உள்ள குறைகளை மட்டும் காக்கை

சொல்லிற்று. இவர்கள் செய்த நற்செயல் ஒன்றைக்கூட அது சொல்லவில்லை. அரசருக்குத் தனது சுற்றத்தினரிடமும் நம்பிக்கை குறைந்தது. அவர் முனிவரையே மந்திரியாக்கிக் கொண்டார். திரிகாலஞானியான காக்கையும் கூட இருந்தது. முனிவர் நாட்டின் நன்மைக்காக பல நன்மைகளைச் செய்தார். காக்கை இவற்றைக் கவனிக்கவில்லை. மந்திரிப் பொறுப்பைக் கவனிக்கும் போது முனிவர் சூழ்நிலை நிர்பந்தத்தால் சில தவறான செயல்களைச் செய்ய நேரிட்டது. அவரது காக்கை இவற்றைப் பலர் முன்னிலையில் சுட்டிக் காட்டியது.

முனிவர் சிந்தித்தார். தவறே செய்யாமல் பணி புரிவது கடினமானது. சிறு சிறு தவறுகளுக்கிடையே அவர் பல பெரும் நற்பணிகளையும் புரிந்துள்ளார். அந்த நற்பணிகளால் நாட்டிற்கு நன்மை ஏற்பட்டுள்ளது. குறைகளை மட்டும் கவனித்தால் உலகில் எல்லோரையுமே ஒதுக்க நேரும். நல்லதைப் பொருட்படுத்தி அதனைச் செய்ததற்கு நன்மதிப்பு அளித்தால் நல்லதைச் செய்கின்ற பண்பு வளரும்.

தவறு செய்கின்ற வாய்ப்புக் குறையும். காக்கையின் வழியில் குறையை மட்டும் பொருட்படுத்தி அதைப் பெரிதுபடுத்துவதால் நல்லதைச் செய்வதில் ஊக்கம் குறையும். காக்கையின் இயல்பு மனிதனுக்கு ஏற்றதல்ல. தானும், காக்கையும் நாட்டிற்கு நன்மை புரியவில்லை என்று உணர்ந்தார். அரசரிடம் இதனைத் தெரிவித்தார். மந்திரி பதவியிலிருந்து விலகினார். முன்னிருந்த மந்திரி முதலானவரிடமுள்ள நற் பண்புகளைப் பாராட்டி நற்செயல் புரிய வேண்டினார்.

முனிவர் காட்டிற்குச் சென்றார். காக்கையின் நட்பைத் துறந்தார்.

# ஸ்வர்க்கத்தில் சுகம்

இன்பத்தை நாடுபவன் கடும் உழைப்பினால் அதனைப் பெறுகிறான். இன்பத்தைக் காப்பதற்கும் அதனை இழக்காமலிருக்கவும் கடுமையாக உழைக்க நேரிடுகிறது. பிறர் நலனுக்கென்று உழைக்கும் போது அந்த உழைப்பே இன்பமளிக்கிறது. அதனை இழக்க நேராது. உழைப்பே இன்பம்.

குரு க்ஷேத்திரத்தில் முத்கலர் என்று ஓர் நல்லவர் இருந்தார். பண்பும், அடக்கமும் கொண்டவர். இரவும், பகலும் நன்கு உழைத்துக் குருவி சேர்ப்பது போல் பொருள் சேமித்துத் தன் குடும்பத்தினருடன் பகிர்ந்து உண்டு மகிழ்ந்தார். முன் பின் அறிமுகமில்லாத அதிதிகளைத் தாமே அன்புடன் அழைத்து உணவளிப்பார். குடும்பத்தினரும், அதிதிகளும் பெறும் இன்பத்தையே தன்

இன்பமாகக் கருதுவது அவரது இயல்பானது. தான் உழைத்துப் பெற்றனைத்தும் செலவானதில் அவர் வருத்தப்படுவதில்லை. அவை பிறரது நலனுக்குப் பயன்பட்டதில் அளவு கடந்து திருப்தியடைவார்.

ஒருநாள் பகற்பொழுதில் உண்ணும் வேளையில் ஒரு முனிவர் முத்கலரின் வீட்டிற்கு வந்தார். முத்கலர் மிகவும் அன்புடன் அவரை வரவேற்று உணவளித்தார். முனிவர் வியப்புற்றார். தான் சேமித்த பொருள் விருந்தோம்பலால் செலவானதைப் பொருட்படுத்தாததுடன், அது நல்ல முறையில் செலவானதில் இன்பம் காண்பது மிகவும் அரிது. முத்கலரின் இந்தப் பண்பை சோதிக்க முனிவர் முற்பட்டார். அவர் தவ வலிமையால் மூன்று உலகங்களிலும் சுற்றி வருபவர்.

மறுநாளும் உணவிடும் வேளையில் முனிவர் வந்தார். கடும்பசியைக் காட்டிச் சமைத்ததனைத்தையும் தான் ஒருவரே உண்டார். பசி நீங்கிய பின்னரும் மீதி உள்ளதைத் தன் உடலின் மேல் பூசிக் கொண்டு சென்றார். ஒரு பிடியுணவு கூட மீதமில்லை. முத்கலர் அதனால் வருந்தவில்லை. பெரும்பேறு பெற்றதை எண்ணி மகிழ்ந்தார். முனிவர் அத்துடன் நில்லாமல் தொடர்ந்து தினமும் வரத் தொடங்கினார். சமைத்த உணவனைத்தையும் தாமே ஏற்றுச் சென்றார்.

ஐந்தாம் நாள் முனிவர் முத்கலரிடம் சென்றார். ‘‘முத்கலரே! நீர் செய்கின்ற நற்பணி உமக்குச் சுவர்க்க சுகம் தரவல்லது. உமது புண்ணியத்தால் பெறும் சுவர்க்க சுகத்தை அனுபவிப்பீர்’’ என வாழ்த்தி மறைந்தார்.

சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்ல அழகிய தேர் வந்தது. தேரோட்டி முத்கலரைத் தேரில் ஏறுமாறு வேண்டினான். முத்கலர் வியப்புடன் அவரைப் பார்த்துக் கேட்டார். ‘‘அன்பரே! சுவர்க்கம் என்பது என்ன? அங்கு பெறும் இன்பம் எத்தகையது.?’’

தேரோட்டி சொன்னார் - ‘‘கடும் உழைப்புடன் தன்னலமற்று நீர் செய்த நல்வினைகள் புண்ணியமாகக் கொண்டு உம்மை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்கின்றன. அங்கு அந்தப் புண்ணியம் இன்பமாக மாறி உம்மை வந்தடையும். அங்குள்ள சூழ்நிலையும் சுற்றியிருப்பவரும் காண்கின்ற காட்சிகளும் உண்கின்ற உணவும் துன்பக் கலப்பில்லாத இன்பத்தையே தரும். இதுவே சுவர்க்கம்.’’ என்றார்.

முத்கலர் ‘‘அங்கு குறை ஏதும் உண்டா?’’ என அவனிடம் கேட்டார். குறை ஏதும் இல்லாத இடமே சுவர்க்கம். எனினும் இரு குறைகளைக் காணலாம். ஒன்று - நாம் இன்பத்தை அனுபவிக்கும் போது புண்யம் குறைவது நமக்குத் தெரியாது.

சுவர்க்கத்திற்கு அழைத்து வந்த புண்ணியம் அனைத்தும் தீர்ந்ததும் சுவர்க்கத்திலிருந்து விழ நேரும். அப்போது இந்தத் தேர் வராது. அந்த வீழ்ச்சி பெரும் துன்பம் தரும். பெற்ற இன்பம் விலகும் போது ஏற்படுகின்ற துன்பம் ஈடற்றது. இது ஒரு குறை. மற்றொன்று - இன்பம் குறையாதபடி அவ்வப்போது புண்யம் சேமிப்பதற்கான நற்பணிகளைப் புரிய சுவர்க்கத்தில் வாய்ப்பில்லை. அதனால் புண்ணியம் குறைவதைத் தடுக்க வாய்ப்பில்லை. அதனால் வீழ்ச்சியுறுவது தவிர்க்க முடியாதது. நற்பணிகளைப் பூவுலகில் மட்டுமே செய்ய முடியும். இந்த இரு குறைகளை எவரும் பொருட்படுத்து வதில்லை. இன்பத்திலுள்ள நாட்டம் கண்களை மறைத்து விடும் என்றார் தேரோட்டி.

“நண்பரே! நான் சுவர்க்கத்திற்கு வரவில்லை. அங்கு நான் பெறும் இன்பத்தை நான் மட்டுமே அனுபவிக்க முடியும். என் சுற்றத்தாருடன் அதனைப் பகிர்ந்து கொள்ள முடியாது. என்னுடன் சிறிதும் தொடர்பில்லாத அதிதிக்கு என்னால் அதனை வழங்க முடியாது. பிறர் நலனுக்காக உழைப்பதிலும், உழைப்பதால் பெற்றதைப் பகிர்ந்து கொள்வதிலும் எனக்கு அளவற்ற இன்பம் கிடைக்கிறது. பிறர் இன்பத்தைக் காண்பதில் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதனைத் தருகின்ற உழைப்பையே நான் பேரின்பமாகக் கருதுகின்றேன். இது செலவாவதால் குறையாத இன்பம் ஒருநாள் தன்னைவிட்டு விலகுமே என்ற அச்சத்தைத் தரும். இதில் அந்த அச்சத்திற்கு இடமில்லை. சுவர்க்கத்தைத் தரவிருக்கின்ற புண்ணியத்தையும் என்னைச் சுற்றியுள்ளவர்க்குப் பகிர்ந்தளிக்கிறேன். நீர் போகலாம்” என்றார் முத்கலர்.

உழைப்பால் பெற்றதைப் பலருடன் பகிர்ந்து அனுபவிப்பதால் பெறுகின்ற இன்பத்திற்கு இணை ஏதுமில்லை.

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஆகஸ்ட் விடைகள்

1. விஜயா
2. த்ரிசதீ
3. கொடுங்காளூர் (கேரளம்)
4. வித்யுன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன்
5. மானஸம், உபாம்சு, வ்ருகம்
6. ஸ்வபல்கர் காந்தினீ
7. ஸ்யமந்தகமணி
8. ரிஸ்யஸ்ருங்கர்
9. திருபட்டீஸ்வரம்
10. போகி

# அனுக்ரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### ஸ்ரீ மடம் முகாம் நிகழ்ச்சிகள்

ஆஸ்திக சமாஜம், வீனஸ்காலனி, ஆழ்வார்பேட்டை சென்னை



ப்ரதி தினம் காலை 8.30 மணிக்கு (அனத்யயன தினம் தவிர) மஹாமஹோபாத்யாய முல்லைவாசல் ஸ்ரீ R. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் தலைமையில் வேத பாஷ்ய சதஸ் நடைபெற்று வருகிறது.

03.08.19 சனிக்கிழமை அன்று ஆடிப்பெருக்கு (ஆடி 18) காவேரி பூஜை வழக்கம்போல் நடத்தப்பட்டது.

15.08.19 ருக் /யஜுர் உபாகர்மா ஸ்ரீமடம் முகாமில் வேதோக்தமாக நடந்தது. 50க்கும் மேற்பட்ட யஜுர்வேதிகளும், 30 ருக்வேதிகளும் உபாகர்மா செய்தார்கள். 16.08.19 காயத்ரீ ஜபம். சுமார் 100க்கும் மேற்பட்ட ப்ரும்மச்சாரிகளும், க்ருஹஸ்தர்களும் ஸங்கல்பம் செய்து கொண்டு ஸஹஸ்ர காயத்ரீ ஜபம் செய்தார்கள்.

16.08.19 - ஸ்ரீ பெரியவாள் ஜயந்தி

ஸ்ரீ பெரியவாள் ஜயந்தி ஸ்ரீமடம் முகாமில் விசேஷமாக கொண்டாடப்பட்டது. சதுர்வேத பாராயணம் 16.08.19 முதல் 18.08.19 வரை 3 நாட்களுக்கு நடந்தது. ஸுவாஸினி பூஜை, தம்பதி பூஜை, கன்யா பூஜை, வடுக பூஜை செய்விக்கப்பட்டது. மாலை ஸ்ரீ பெரியவாள் பாதுகைக்கு ஸ்வர்ண பாதபூஜை ஸ்ரீ பாலபெரியவாள் செய்தார்கள். இரவு 7.00 மணி அளவில் ஸ்ரீ பெரியவாள் திருவுருவச் சிலை, மங்கள வாத்யம், நாம சங்கீர்த்தனம், வேதபாராயணம் மற்றும் ஏராளமான பக்தர்கள் புடைசூழ ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. வழிநெடுக பக்தர்கள், பொதுமக்கள் ஆரத்தி எடுத்து வணங்கினார்கள். ஸ்ரீ பெரியவாள் உபயோகித்த INNOVA வண்டியும் இந்த ஊர்வலத்தில் வந்த்து குறிப்பிடத்தக்கது.

ஜயந்தியின் 2ம் நாளான 17.08.19 அன்று இந்தப்பகுதியில் வசிக்கும் ஏழை எளியவர்களுக்கு தையல் மிஷன், இஸ்திரிப்பெட்டி, இட்லி குண்டான் முதலியன

வழங்கப்பட்டன. சுமார் 80 பயனாளிகள் பயன்பெற்றனர். அருகிலிருக்கும் அரசுப் பள்ளிக்குழந்தைகளுக்கு நோட்டுப்புத்தம் பேனா பென்சில் அடங்கிய ஒரு செட் வழங்கப்பட்டது. இரவு கும்பகோணம் ஸ்ரீ முருகன் குழுவினர் ''நரஸிம்மாவதாரம்'' பொம்மலாட்டம் நடத்தியது வெகுவாக பாராட்டப்பட்டது. ஏராளமான பக்தர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

3ம் நாள் (பூர்த்தி) 18.08.19 அன்று வேதபாராயண பூர்த்தி, சம்பாவனை, இரவு கிழக்கு தாம்பரம் சங்கரவித்யாலயா பள்ளி மாணவர்கள் நடத்திய ''ஜயேந்த்ர விஜயம்'' நாடகம் பெரும் வரவேற்பை பெற்றது.

23.08.19 வெள்ளியன்று ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி (கோகுலாஷ்டமி பூஜை) நடந்தது. நள்ளிரவு 12 மணிக்கு பூஜை முடிந்து ஜனன கட்டம் வாசிக்கப்பட்டு வரதானம் செய்யப்பட்டது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் அந்த நள்ளிரவு நேரத்திலும் வந்திருந்து பூஜையை தரிசனம் செய்தார்கள்.

21.08.2019 அன்று வைகானச அர்ச்சகர்கள் குடும்பத்தைச்சேர்ந்த ஸ்தீரீகள், 22.08.2019 அன்று சிவாச்சார்யார்கள் குடும்பத்தைச்சேர்ந்த ஸ்தீரீகள், 23.08.2019 அன்று வைதீகர்கள் குடும்பத்தைச்சேர்ந்த ஸ்தீரீகள் ஆகியோர்கள் ஸ்ரீ பெரியவாளை தரிசனம் செய்தார்கள். அவர்களின் தற்போதைய நிலை மற்றும் குடும்ப சூழ்நிலை போன்ற சுவாரச்யமான விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன. ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹ பாஷணம் செய்தார்கள்.

இந்த சாதுர்மாஸ்ய காலத்தில் பல்வேறு ஆன்மிக நிகழச்சிகள் ஸ்ரீகாமாக்ஷி ஸ்ரீ வித்யா சமிதியின் மூலம் நடைபெற்றது. அவற்றுள் சில

1. 11.08.19 அன்று சுமார் 150 கன்யா குழந்தைகள் பங்குபெற்ற துளசி பூஜை நடத்தப்பட்டது.

2. 18.08.19 அன்று சுமார் 150 ப்ரம்மச்சாரிகள் கலந்து கொண்ட வெங்கடேச சமாராதனை நிகழச்சி நடத்தப்பட்டது.

3. 25.08.19 அன்று சுமார் 300 சுமங்கலிகள் பங்குபெற்ற லலிதா சஹஸ்ரநாம பாராயண நிகழ்ச்சி நடைபெற்றது.

இது தவிர திருக்கோயில் வழிபாட்டுக் குழு என்ற அமைப்பின் வருடாந்திர மாநாடும் 25.08.19 ஞாயிறன்று நடைபெற்றது. இந்த இரண்டு நிகழ்விலும் கலந்து கொண்ட ஸ்ரீ பெரியவாள் லலிதா சஹஸ்ரநாமத்தின் மஹிமை குறித்தும் கிராமத்துக் கோயில்கள் பராமரிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் கிராமங்களின் முன்னேற்றம் நாட்டின்

வளர்ச்சிக்கு எவ்வளவு அத்யாவசியம் என்பது பற்றியும் சுவாரஸ்யமாக எடுத்துரைத்தார்கள்.

ப்ரதி தினமும் ஆன்மீக சொற்பொழிவுகள், ஹரிகதை, நாமசங்கீர்த்தனம் போன்ற நிகழ்ச்சிகளும் நடந்தன. குறிப்பாக 01.08.19 முதல் 07.08.19 முதல் ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி அவர்களின் பாகவத சப்தாஹமும் (காலையில் பாராயணமும் மாலையில் உபன்யாசம்), 12.08.19 மற்றும் 13.08.19 ஆகிய இருதினங்கள் ஸ்ரீ ஜயகிருஷ்ண தீக்ஷிதர் அவர்களின் நாம சங்கீர்த்தனமும் நடைபெற்றது.

இது தவிர பல்வேறு கலை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெற்றது.

1. 02.08.19 - ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி சேகர் - வீணை
2. 07.08.19 - ஸ்ரீமதி ஷோபனா ஸ்வாமிநாதன்- வீணை
3. 09.08.19 - குமாரி அதிதி- ஸ்ரீநிதி - பாட்டு
4. 10.08.19 - ஸ்ரீமதி ரேவதி கிருஷ்ணமூர்த்தி - தேவாரம்

ஸ்ரீ விக்னேஷ் குழுவினர் - பாட்டு

அன்று தஞ்சாவூர் மாவட்ட கிராமக்கோயில்கள் பராமரிப்பு/ செயல்பாடு குறித்த கலந்துரையாடல்

5. 11.08.19 - மைலாப்பூர் மயூரேசா சாரிடபிள் டிரஸ்ட்- குருவந்தனம்
6. 12.08.19 - நொளம்பூர் கல்யாணி சந்திரமௌலி - காமாக்ஷி திருப்புகழ்
7. 19.08.19 - ஸ்ரீமதி ரோஹிணி ஸ்ரீநாத் - வாய்ப்பாட்டு
8. 21.08.19 - ஸ்ரீமதி பூமா ராமச்சந்திரன் - மூகபஞ்சசதி பாராயணம்
9. 22.08.19- பேபி காதம்பரி காமாக்ஷி - கதாகாலக்ஷேபம்
10. 23.08.19 - ஸ்ரீ விஷால் சாய்ராம் - சித்ரவீணா
11. 26.08.19 - ஸ்ரீ எஸ். நடராஜன் குழுவினர் - நாமசங்கீர்த்தனம்
12. 27.08.19 - ஸ்ரீமதி சுசித்ரா - ஹரிகதை
13. 28.08.19 - நிகிலா ஷ்யாம்சுந்தர் - நாமஸ்கீர்த்தனம்

29.08.19 அன்று மெலட்டூர் பாகவத மேளா குழுவினரின் ப்ரஹலாத சரித்ரம் - நாட்டிய நாடகம் சிறப்பாக நடைபெற்றது. சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற இந் நாடகத்தை ஸ்ரீ பெரியவாள் முழுவதுமாக அமர்ந்து கவனித்தார்கள். முடிவில் பங்குபெற்ற கலைஞர்களுக்கு ஸ்ரீமடம் சார்பில் சால்வை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.

தொடரும்....



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

## 92. அறிகொன் றறியா னெனினு முறுதி
## உழையிருந்தான் கூறல் கடன்

*(அரசன்) அறி = (பிறர்) அறிந்து கூறலை கொன்று = கேட்காமல் அவமதித்து, அறியான் = (தானும்) அறியாமல் இருந்தான், எனினும் உழையிருந்தான் = அமைச்சன், உறுதி = (அவனுக்கு) நன்மை பயக்கும் பொருளை, கூறல், கடன் = கடமை (ஆகும)*

உழையிருந்தான் என்பதும் வடமொழியல் அமாத்ய என்பதும் ஒருபொருட் கிளவி. இக்குறளில் அச்சொல் மிகப் பொருந்தும். ஏனெனில் அச்சொல்லிலிருந்து யாராது உழை இருந்தான் என்ற கேள்வி பிறக்க கொன்று அறியான் என்பதற்கு எழுவாயாக அரசன் என்னும் கிடைக்கின்றது.

*அறி என்பது பெயர்ச்சொல்*

*ராகம், மானம், மதம், இவை நிரம்பித் தவறிய அரசனுக்கு நட்புற்ற மந்திரியின் செயல். கைகொடுத்துதவும் என்னும் மகாபாரதச் செய்யுள் நோக்கத்தக்கது.*

## 93. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
## சான்றோர் பழிக்கும் வினை

*(அமைச்சன்), ஈன்றாள் பசி = தாயின் பசியை காண்பான் ஆயினும் = கண்டானும், சான்றோர் = பெரியோர், பழிக்கும், வினை = செயல்களை, செய்யற்க = செய்தல் தகாது.*

*நூற்றுக்கணக்கான அகார்யத்தைச் செய்தாவது தாயைக் காப்பற்ற வேண்டும் என "மாதாபிதரென அபி - அகார்ய - ஸதம் - க்ருத்வா ... என்று தர்மசாஸ்திரத்தில் (மநுஸ்ம்ருதி 11வது அத்யாயம் 11வது சுலோகம்) கூறியிருக்க ஈண்டு இவ்வாசிரியர் இவ்வாறு கூறுதல் பொருந்துமா? எனில் உண்மையே. ஆயினும் அவ்விதி மக்களெல்லோருக்கும் பொது என்றும் அவ்விதிக்கு விக்கு அமைச்சன் என்பதும்*

அறிதல் ஆகும். அன்றியும் ஒரு காரணம் பற்றிச் செய்யத்தகாத காரியத்தை அரசர் செய்தலைத் தர்ம நூல்கள் ஆதரித்தல் அரிது.''

## 94. சலத்தாற் பொருள் செய்தே மார்த்தல் பசுமட் கலத்துணீர் பெய்திரீ இயற்று

(அமைச்சன்) சலத்தால் = மோசடியினால், பொருள் = பொருளை, செய்து = சம்பாதித்து, ஏம் ஆர்த்தல் = க்ஷேமத்தை அடைதல், பசுமட்கலந்துள் சூலையில் வைக்கப்படாத மட்பானையில், நீர் = நீரை, பெய்து இரீ இயற்று = இருக்குமாறு செய்ததை ஒத்தது.

சுடாத பானையில் வைத்த நீர் விரைவில் அதை விட்டு நீங்குமாறு வஞ்சனையால் சம்பாதித்த பணம் விரைவில் கெடும் என்பதும், அக்காரணம் பற்றி அமைச்சன் சலத்தை ஏற்றல் தகாது என்பதும், கருத்து.

சலம் என்பது வஞ்சனை என்ற பொருளை கொண்ட வடமொழிச் சொல்லின் தற்பவம்.

ஏம் என்பது ஏமம் என்பதால் இடைக்குறை, ஏமம் என்பது வடமொழி க்ஷேமத்தின் தத்பலம்.

சலம் என்னும் பதப்ரயோகம் செய்திருப்பதியிலிருந்து திருவள்ளுவர் தேர்ந்த ஸம்ஸ்க்ருதபாண்டித்ய முள்ளவரென்பது விளங்குகிறது.


॥ ஸ்ரீ: ॥

இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.
பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை
Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி
எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.
க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்
எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.
(Transliteration in all Languages done here.)
Grantham to Devanagiri, Grantham to Tamil,
மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்
உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்
அச்சிட்டு தரப்படும்.

**Contact : V.K.N. Enterprises (Printer)**
Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்



மதங்க முனிவரின் ஆஸ்ரமத்திலிருந்து கிளம்பிய ராமலக்ஷ்மணர்கள் பம்பையைத் தாண்டி கிஷ்கிந்தைக்கு வருகிறார்கள். வாலி வதமாக சுக்ரீவன் வானரர்களை நானாதிக்குகளிலும் சீதையைத் தேட அனுப்புகிறான். அங்கதன் ஆஞ்சனேயர்களுடன் சென்ற வானரர்கள்

தென்திக்கில் தேடித் தேடி அலுத்துப்போய் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொல்லி அங்கலாய்க் கிறார்கள். அவர்களுடன் ஸம்பாதி எனும் கழுகின் உரையாடலுடன்துவங்குகிறது

**''ஸம்பாதிர் நாம்னா து சிரஞ்சீவி விஹங்கம:**

**ப்ராதா ஜடாயுர்ஸ்ரீமான் வித்யாத பலபௌருஷ:'' ॥**

ஸிரஞ்சீவியான ஜடாயுவின் அண்ணன் ஸம்பாதி எனும் பெயர் கொண்டவன் புகழ் மிக்கவன் பலம் பொருந்தியவன்.

**கந்தராத் அபினிஷ்க்ரம்ய ச விந்த்யஸ்ய மஹாகிர:**

**ஊபவிஷ்டான் ஹரீன் த்ருஷ்ட்வா ஹ்ருஷ்ட்வா கிரமப்ரவீத் ॥**

விந்த்யமலையின் குகையிலிருந்து வெளிவந்த ஸம்பாதி அங்கு இருந்த வானரர்களைப் பார்த்து கூறியது.

**''விதி: கில நரம் லோகே தானேன அனுவர்த்தே**

**வதாய விஹிதோ பக்ஷ்யஸ் சிரான் மஹ்யம் மே ஆகத: ॥''**

இவ்வுலகில் ப்ரம்மதேவன் கட்டளைப்படித் தான எல்லாம் நடக்கிறது. கொல்லப்படுவதற்கு என்று நியமிக்கப்பட்ட இந்த வானரர்களை நான் வெகுகாலம் உண்ண வேண்டும் என்பதற்காகவே அனுப்பியுள்ளார்.

**'பரம்பராணாம் பக்ஷிஷ்யே வானராணாம் ம்ருதம் ம்ருதம்**

**உவாசைதத் வச:பக்ஷீதான் நிரீக்ஷ்ய ப்லவங்கமான்'' ॥**

இந்த வானரங்களை இறக்க இறக்க நான் உண்பேன் என்று கூறி அவர்களைப்பார்த்து கூறியது. இதனைக்கேட்ட அங்கதன் அனுமனிடம் கூறுவான்

**பஸ்ய ஸீதாபதேஸேன ஸாக்ஷாத் வைவஸ்வதோ யம:**

**இமம் தேசம் அனுப்ராப்தோ வானராணாம் வியபத்தயே ॥''**

பாருங்கள் சீதையைப் பற்றிப் பேசி கொண்டிருக்கையில் நம் அழிவிற்கு வைவஸ்வதன் எனும் யமன் வந்துள்ளான்.

**ராமஸ்ய ந க்ருதம் கார்யம் ந க்ருதம் ராஜசாஸனம்**

**ஹரீணாம் இதம் அனுஞ்யாதா விபத்தி ஸஹஸா ஆகதா'' ॥**

ராமனினின் வேலையும் செய்யப்படவில்லை, ராஜாவின் ஆணையும் செய்யப்பட வில்லை. எதுவும் தெரியாத வானரங்களுக்கு இயல்பாக அழிவு ஏற்பட்டுள்ளது.

**வைதேஹ்யா ப்ரியகாமேன க்ருதம் தர்ம ஜடாயுஷா**

**க்ருத்ரராஜேன யத்தத்ர ஸ்ருதம் வசஸ்தத் விசேஷத:'' ॥**

வைதேஹிக்குத் தொண்டு செய்யும் எண்ணத்தோடு ஜடாயுவினால் தர்மகார்யம் செய்ய்ப்பட்டது. அது விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

**''ப்ரியம் க்ருதம் ஹி ராமஸ்ய தர்மேண ஜடாயுஷா**

**ராகவார்தே பரிஸ்ராந்தா வயம் ஸம்யக் ஜீவிதா:'' ॥**

தர்மம் அறிந்த ஜடாயுவினால் ராமனுக்குப் பிடித்த செயல் செய்யப்பட்டது. ராமருக்காக தன் உயிரையும் கொடுத்து உதவினார். ராமன் கானகம் வந்தது முதல் சீதையை கவர்ந்து சென்றது, வாலி வதம் சுக்ரீவசக்யம், ஜடாயு மரணம் வானரங்களின் தேடல் இவை பற்றி சொன்னதைக்கேட்ட ஸம்பாதி உரக்கப் பேசியது.

**''கோ அயம் கிரா கோஷயதி ப்ராண:ப்ரியதரஸ்ய மே**

**ஜடாயுஷா வதம் ப்ராது: கம்பயன்னிவ மே மன:'' ॥**

எனது உயிருக்கும் மேலான தம்பி ஜடாயு கொல்லப்பட்டான் என்று என் மனதை சங்கடப்படுத்தும் சொல்லை சொன்னது யார்? என்றது.

**கதமாஸீத் ஜனஸ்தானே யுத்தம் ராக்ஷஸக்ருத்ரயோ:**

**நாமதேயம் இதம் ப்ராது: சிரஸ்யாத்ய யோ ஸ்ருதம்'' ॥**

ஜனஸ்தானத்தில் அரக்கனுக்கும் கழுகுக்கும் யுத்தம் எப்படி நிகழ்ந்தது / வெகு நாட்களுக்குப் பின் அவனுடைய பெ யரைக் கேட்கிறேன்.

**அதி தீர்கஸ்ய காலஸ்ய பரிதுஷ்டோஸ்மி கீர்தனாத்**

**தத் இச்சேயம் அஹம் ஸ்ரோதும் வினாசம் வானரர்ஷப'' ॥**

அவனுடைய பெயரைக் கேட்டு பல நாட்களாகின்றன. அவனுடைய வதம் எப்படி நிகழ்ந்தது? இப்படிக் கேட்ட ஸம்பாதியை மலையிலிருந்து வானரர்கள் இறக்கினார்கள். பின்பு அங்கதன் ஜனஸ்தானத்தில் நடந்தது, வாலிவதம், சுக்ரீவ ராமன் நட்பு வானரர்களின் தேடல் இவை அனைத்தையும் விவரித்தான். மிகவும் துக்கப்பட்ட ஸம்பாதி அவனுக்குத் தர்பணம் செய்தார். அப்போது அவருடைய எரிந்து போன இரு இறக்கைகளும் முளைத்தன. வானரர்கள் ஆச்சர்யத்துடன் பார்க்க ஸம்பாதி தன் வரலாறை கூறத்தொடங்கியது.

(தொடரும்)


"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் ,
4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம்,
7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும்**
**ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# புரட்டாசி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 25-09-2019 | புதன் | ஏகாதசி |
| 25-09-2019 | புதன் | ஸந்யஸ்த மஹாளயம் |
| 26-09-2019 | வியாழன் | துவாதசி |
| 26-09-2019 | வியாழன் | ப்ரதோஷ பூஜை |
| 28-09-2019 | சனி | மஹாளய அமாவாசை |
| 29-09-2019 | ஞாயிறு | நவராத்திரி ஆரம்பம் |
| 02-10-2019 | புதன் | அனுஷம் தேர் |
| 03-10-2019 | வியாழன் | அனுஷம் பாராயணம் |
| 04-10-2019 | வெள்ளி | மூலம் தேர் |
| 06-10-2019 | ஞாயிறு | உத்ராடம் தேர் |
| 07-10-2019 | திங்கள் | உத்ராடம் பாராயணம் |
| 07-10-2019 | திங்கள் | ஸரஸ்வதி பூஜை |
| 08-10-2019 | செவ்வாய் | விஜயதசமி |
| 09-10-2019 | புதன் | அவிட்டம் தேர் |
| 09-10-2019 | புதன் | அவிட்டம் பாராயணம் |
| 09-10-2019 | புதன் | ஏகாதசி |
| 10-10-2019 | வியாழன் | துவாதசி |
| 11-10-2019 | வெள்ளி | ப்ரதோஷ பூஜை |
| 13-10-2019 | ஞாயிறு | பௌர்ணமி பூஜை |
| 20/09/19, 27/09/19, 04/10/19 - 11/10/19 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

13. பகவான் கிருஷ்ணன் உறுதியான பக்தி நிஷ்டையில் அடைய ஸுலபன், யோகிகளால் ஆதரித்து ஆராதனம் பண்ண முடியாத அவன் உன்னைப் போன்ற எளியவரால் ஸுகமாக ஆராதிக்கப்படக் கூடியவன்.

14. தாயின் வார்த்தையைக் கேட்டு பகவானைக் குறித்துத் தவம் செய்யச் சென்ற துருவன் வழியில் முனிவர் பெருமக்களான மரீசி, அத்ரி, அங்கிரஸன், புத்ஸ்த்யர், புலஹர், க்ரது, வஸிஷ்டர் ஆகியவர்களைச் சந்திக்கிறான்.

'உத்தான பாதன் குழந்தாய் எல்லாம் நிறைந்திருக்கும் உன் அரண்மனையை விட்டு சோகத்தில் வாடியவனாய் எங்கு போகிறாய்'.

15. 'குழந்தாய் இளம் வயதினனாய் (அழகிய பாலகனாய்) இருக்கிறாய். தபம் செய்ய இயலாதவன் நீ வனம் மிகவும் கடினமான இடம் (இருக்க முடியாத இடம்) உன் தகப்பனாரை ஸமாதானப்படுத்துகிறோம் வா'.

16. எல்லாம் அறிந்த அறிஞர்களே ! உமக்கு நான் என்ன சொல்லட்டும். தகப்பனாரால் வெறுக்கப்பட்டவன் நான் எனவே காட்டுக்குப் போகிறேன்.

17. 'எல்லா உலகங்களுக்கும் ஈச்வரனான பிரபு, மன உறுதியோடு தவம் செய்பவர்களாலேயே அடைய முடியாதவன் அந்த பகவான் விஷ்ணு.'

18. 'எல்லா தேவதைகளும் நன்கு ஆராதிக்கின்ற பகவான் விஷ்ணு: அடைவதற்கு அடைய முடியாத அந்த பகவான் எப்படி உன் வசம் வருவான்?' என்றார் முனிவர்.

19. 'எனக்கு விளையாட்டில் விருப்பமில்லை. பக்ஷணங்கள் உணவு எதையும் விரும்ப மாட்டேன். அந்த ஸாக்ஷாத் க்ருஷ்ண தரிசனம் ஒன்றையே விரும்புகிறேன்' என்றான் துருவன். மேலும்

20. 'எனக்கு அந்த பகவான் தான் தந்தை, தாய், நண்பன், பந்து, ஆசார்யன் எல்லாம். யோகிகளாலும் காண முடியாத அந்த பரம்பொருளை, கருணைக் கடலாகிய நீங்கள் தான் காட்ட வேண்டும்.'

21. நான் செல்வத்தை விரும்பவில்லை. அரசைக்கூட விரும்பவில்லை. பிராமணோத்தமர்களே! இதற்கு முன்பு யாரும் அடையாத அனுபவிக்க முடியாத ஓர் உயர் இடம், அதை அந்த இடத்தை மட்டும் அடைய விரும்புகிறேன்.

22. முனிவர்களே ! எல்லா இடங்களுக்கும் மேலான இடத்தை யான் அடையதற்காக என்ன செய்ய வேண்டுமோ, அதைச் சொல்லுங்கள்.

குறிப்பு : இதை எழுதும் போது தலைதூக்கிய எண்ணம், துருவ சரித்ரம் கேட்கும் நாம், படிக்கும் நாம் ஒன்றைத் தெளிய வேண்டும். ஐந்து வயதிலே அந்தச் சிறுவனுக்கு ஏற்பட்ட மன உறுதி, எண்பது வயதிலும், நமக்கு ஏற்படவில்லையே ஏன்? இதனை சிந்தித்து விடை காண முயலுவோம்.

துருவன் மன உறுதியைக் கண்ட முனிவர்கள் ஒவ்வொருவரும் சொன்ன பதில்கள் ‘‘ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோர் ஆராதனம்பரம்’’ என்பதற்கான அகச் சான்றுகள்.

23. மரீசி சொன்னது : அரசன் மகனே ! மனிதர்களால் கோவிந்தனை ஆராதனம் செய்யாமல் உயர்ந்த நிலையை அடைய முடியாது. எனவே, அச்யுதனாம் அந்த எம்பெருமானை ஆராதனம் செய்.

24. அங்கிரஸர் : இவ்வுலகின்கண் உள்ள அழிவிலா ஆத்மாக்கள் எல்லாம் எவனை எல்லையாகவுடையனவோ அந்த கோவிந்தனை, உயர்நிலையை அடைய விரும்பி ஆராதனம் செய்.

குறிப்பு : வெளியில் மற்றவர் பார்ப்பதற்காக செய்யப்படுவது அல்ல ஆராதனம். தன் எண்ணம், செயல் எல்லாம் அவனே என்று முடிவு செய்து வாழ்வில் எதுவந்த போதும் அவனையே நினைந்து, அவனைப் பற்றியே பேசி, அவனைப் பற்றி எழுதி, இரவு பகல் என்று பாராமல் உடல் நோய், உள்ள நலிவு இவைகளைப் பற்றி சிந்தியாமல் மனதில் நினைத்து செய்யப்படுவது. இதை எழுதும் போது 21.01.2017 இரவு 11.30 மணிக்கு தேவாதிராஜன் ஆணையிட்டான் நீ எழுதப் பிறந்தவன். எழுது! எழுது! என்னைப் பற்றி எழுதிக் கொண்டே இரு என்றான்.

25. புலஹர் : நல்ல வ்ரதம் மேற்கொண்டுள்ள துருவா ! இந்திரர்களுக்கெல்லாம் இந்திரனாய், உலகின் நாயகனாய், வேள்வி நாயகனாய் தோன்றும், ஸ்ரீ விஷ்ணுவை உயர்நிலை அடைய விரும்பும் நீ ஆராதனம் செய்வாயாக.

(தொடரும்)

# ஸ்ரீஸிந்து நதி மாஹாத்மியம்

- பி.ஆர்.கண்ணன், நவி மும்பை

ஸிந்து நதியின் மணலை சிரஸில் தரிப்பதால், அக்ஞானம் மறைந்து, சிவ ஸ்வரூபத்தை அடைகிறான் மனிதன் என்கிறது புராணம். ஸிந்து ஜல தரிசனம், ஸ்பரிசம், பானம் ஆகியவற்றால் மனிதனின் முன்னேழு, பின்னேழு தலைமுறைகளை முன்னேற்ற முடியும்.

பிரம்ம புராணத்தில் ஸிந்து நதியின் பெருமைகளைப் பலவாக விவரிக்கும் போது, ஆனி மாத பௌர்ணமி தினத்தன்று (மஹாஜ்யைஷ்டி) ''ஸ்ரீகிருஷ்ண தரிசன பலனுக்கு சமமாக, ஸிந்து, விதஸ்தா, சந்திரபாகா, ஸதத்ரு, விபாசா, கங்கை, யமுனை, ஸரஸ்வதி ஆகிய நதிகளில் ஸ்னானமும், தானமும் பலனையளிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பத்மபுராணம் ஸிந்து, சந்திரபாகா, ஸரயு, கண்டகி, கௌசிகி நதிகளில் ஒரு மாதம் ஸ்னானம் செய்தால் மோக்ஷமே ஸித்திக்கும் என்கிறது. பல க்ஷேத்திரங்களின் மகிமையைச் சொல்லுங்கால், சந்திரபாகா கங்கையுடன் இணையும் ஸ்தலத்தில், துக்தேஸ்வரர் க்ஷேத்திரப் பெருமையை புராணம் விவரிக்கிறது . மேலும், ஸிந்து நதிக்கரையில், தேவதைகளே 'மௌலிஸ்தான்' (தற்கால மூல்டான்) என்கிற சிறந்த பட்டிணத்தை நிறுவியதைக் கூறுகிறது. ஸிந்துவின் பிரவாஹப் பேரோசை இந்நகரத்தில் கேட்பதாகவும், கலியுகத்தில் ம்லேச்சர்களும், பாபிகளும் இங்கு குடியேறுவார்கள் என்றும் சொல்கிறது.

சந்திரபாகா ஸிந்துவுடன் இணையும் துக்ததீர்த்தத்தில் ஸ்ராத்தம் செய்து, எள், பிண்டங்கள் பித்ருக்களுக்கு ஸமர்ப்பிப்பவன் விஷ்ணு பதத்தை அடைகிறான்.

பிரம்மாண்ட புராணத்தில் ஸிந்துவும், சந்திரபாகாவும் மானஸ ஸரோவரில் உற்பத்தியாகி, எல்லா ஜீவராசிகளையும், முக்கியமாக தர்மம் தவறாதவர்களை புனிதப்படுத்துவதாக கூறப்பட்டிருக்கிறது.

''ஸ்ரீமத் பாகவதத்தில், ஜம்பூத்வீப வர்ணனையில், சில நதிகளின் பெயர்களை உச்சரித்தாலே புனிதம் கிடைக்கும் என்னும் போது, பாரததேச மக்களுக்கு அந்நதிகளின் ஸ்பரிச பாக்கியம் கிடைத்துள்ளது என்று கூறி, ஸிந்து, ஸுஷோமா,

ஸதத்ரு, சந்திரபாகா, மருத்வ்ருதா, விதஸ்தா, அஸிக்னி, கங்கை, யமுனை, ஸரஸ்வதி நதிகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ தேவிபாகவதத்தில், சக்திபீடங்கள் வரிசையில், விபாசாவில் அமோகாக்ஷி, சந்திரபாகாவில் காலதேவி ஆகிய மூர்த்தங்களும், மற்றும் ஸிந்து பிரதேசத்தில் பல தேவி க்ஷேத்திரங்களும் ஸ்தோத்திரிக்கப்படுகின்றன.

பவிஷ்யபுராணத்தில், ஸ்ரீ கிருஷ்ணருக்கும், ஜாம்பவதிக்கும் பிறந்த ஸாம்பன் கதை வருகிறது. துர்வாஸருடைய சாபம் காரணமாக குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்ட ஸாம்பன், ஸூரிய உபாஸனை செய்து, ரோக நிவாரணம் அடைந்தான். பிறகு சந்திரபாகா நதிக்கரையில் ஸாம்பா என்ற இடத்தில் சூரியன் ஸாம்பனுக்கு தரிசனம் தந்து ஸத்கதி நல்கி, எல்லோருக்கும் அனுக்ரகம் செய்துகொண்டிருக்கிறார்.

வராஹபுராணத்தில், பிரம்மகபாலம் கையில் ஒட்டிக்கொள்ளவே, பூமியில் பல தீர்த்தங்களில் ஸ்ரீ ருத்திரன் ஸ்னானம் செய்ததைக் கூறுகிறார்கள். அப்போது ஸிந்து, விதஸ்தா, சந்திரபாகா நதிகளில் ஸ்ரீருத்திரன் ஸ்னானம் செய்து, சந்திரபாகா தீரத்தில் சந்திரேஸ்வரரை உபாஸித்து, ஸிந்துவின் சக்கிர தீர்த்தத்தில் ஸ்னானம் செய்தார்.

ஸ்காந்த புராணத்தில், சிவபெருமான் அக்கினிதேவரிடம் சில நதிகளைக் குறிப்பிட்டு, அவர்களை அக்கினி விவாகம் செய்துகொண்டு, அவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகளே, யாகங்களில் உபயோகமாகும் அக்கினிகளாவார்கள் என்றார். பதினாறு நதிகள், திஷ்ணி என்ற பெயருடன் அக்கினி பத்தினிகளாகின்றனர். அவர்கள்: நர்மதா, காவேரி, கிருஷ்ணவேணி, ரேவா, யமுனை, கோதாவரி, விதஸ்தா, சந்திரபாகா, இராவதி, விபாசா, சதருத்ரிகா, கௌசிகி, ஸரயு, ஷிப்ரா, சரஸ்வதி, ஹ்லாதினி. அக்கினிக்கு இவர்களிடம் பிறந்த புத்திரர்களான அக்கினிகளுக்கு 'திஷ்ண்யர்கள்' என்ற பெயர் ஏற்பட்டது.

மேலும், சந்திரபாகா தீரத்தில் சந்திரன் ஆயிரம் வருஷங்கள் தபஸ் செய்து, கோகர்ணேஸ்வரர் (சிவன்) தரிசனம் தந்து, சந்திரனுடைய தேஜஸ் கொண்ட சந்திரபாகா நதி பிரகடனமான கதை வருகிறது.

வாமனபுராணத்தில், ஒரு கோரமான தோற்றம் கொண்ட பிராம்மணன் கதை கூறப்பட்டிருக்கிறது. ஒரு அழகான பிராம்மணப் பெண்ணை அவன் விவாகம் செய்து கொண்ட பிறகு, இருவர் மனத்திலும் மிக்க துக்கம் மேலிடவே, அவன் காடு சென்று

கடும் தபஸ் செய்தான். ஐராவதி நதிதீரத்தில் விஷ்ணு பகவான் தரிசனம் கொடுக்க, அவருடைய கிருபையினால் விஷ்ணு போன்ற ரூபத்தை அடைந்தான்.

மத்ஸ்ய புராணம் ஐராவதி நதியைப் பற்றி சொல்வதாவது: பக்தர்களின் பாபங்களைச் சடுதியில் தீர்ப்பது; பல சிறிய ஆறுகளை தன்னுடன் இணைப்பது; ரிஷிகள், தேவர்கள், மனிதர்கள் எல்லோரும் சேவிப்பது; மனிதர்களை புத்திரர் போல் காப்பது; தடையின்றி பெருக்கெடுத்தோடுவது; பொன்னைக் கொண்டது.

காளிகா புராணத்தில், வஸிஷ்ட மகரிஷி சந்திரபாகா நதிக்கரையில் பிரம்மாவின் ஆணைப்படி அருந்ததியை விவாகம் செய்து கொண்டார் என்று வருகிறது. கார்த்திகை மாதம் முழுவதும் சந்திரபாகாவில் ஸ்னானம் செய்து, ஸ்ரீ விஷ்ணுவை உபாஸிப்பவன் மோக்ஷமடைகிறான்.

வால்மீகி ராமாயணத்தில் ஸிந்து நதியின் கீர்த்தி பல இடங்களில் பேசப்படுகிறது. ஸமுத்திரராஜன் ஸ்ரீ ராமரை கடல் கரையில் தரிசனம் செய்ய வந்த போது ஸிந்து நதியும் பிரதானமாக கூட வந்தாள் என்று வருகிறது.

கங்காஸிந்துப்ரதாநாபிராபகாபிஂ ஸமாவ்ருதஂ ।

ஸாகரஂ ஸமுபக்ரம்ய பூர்வமாமந்த்ர்ய வீர்ய்யவாந் ॥

அப்ரவீத்ப்ராஞ்சலிர்வாக்யம் ராகவம் ரபாணிநம் ॥

மகாபாரதத்திலும் ஸிந்து நதி, கிளை நதிகள் பற்றி வர்ணனை, விரிவான புண்ணிய பலன்கள் எல்லாம் கூறப்பட்டிருக்கின்றன.

ஹேமாத்ரி என்கிற தர்ம சாஸ்திர புத்தகத்தில், ஸ்னான ஸங்கல்ப மந்திரத்தில், நதிகளைப்பற்றி குறிப்பிட்டு,

மஹிதநயேத்யநேக-புண்யநதீபிர்-விலஸிதே

ப்ரஹ்மபுத்ர-ஸிந்துநதாதி-பரமபவித்ர-ஜலவிராஜிதே இத்யாதி ।

ஸிந்து நதி பரம பவித்திரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**ஸாதுபேலா**

ஸிந்து நதியின் மத்தியில் பாகிஸ்தானிலுள்ள ஸிந்த் மாநிலத்தில் ஸுக்கூர் என்ற இடத்தில் ஸாதுபேலா என்கிற விசேஷ க்ஷேத்திரம் அமைந்துள்ளது. 1823ல் ஸ்வாமி பரகண்டி மகராஜ் என்பவரால் இது எழுப்பப்பட்டது. நேபாளத்திலிருந்து வந்த இந்த

*ஸ்வாமிஜி 40 வருஷம் இங்கு தபஸில் ஈடுபட்டு, அன்னபூரணா தேவியை உபாஸித்து, அந்த பிரதேசத்தில் அன்ன ஸம்ருத்தியை உண்டாக்கினார். இந்துக்களுக்கு மிகவும் புனிதமான க்ஷேத்திரமாக இது கொண்டாடப்படுகிறது. ஸிந்து நதியில் ஒரு தீவு போன்ற ஸ்தலத்தில் அமைந்துள்ள இக்கோவில் மிக அழகானது. படகில் போய் தரிசிக்கவேண்டியது. உதாஸீன என்கிற ஆன்மீக இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. பண்டைக்காலத்தில் இந்த க்ஷேத்திரத்தில் பல யாகங்கள் நிகழ்த்தப்பட்டதாக அறிகிறோம். விஷ்ணுகாட், குசவ்ரதகாட், ராமகாட், சக்கிரதீர்த்தம் போன்ற தீர்த்த கட்டங்கள் இங்கு தான் இருப்பதாக ஆதாரம் உள்ளது. வருணபகவான் குரு நானக் தேவருக்கு இங்கு தரிசனம் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.*

*(கட்டுரை ஆதாரம்: 'ஸ்ரீ ஸிந்து-ஸப்தநத-ஸாதுபேலாதீர்த்த-மாஹாத்ம்யம்' - பண்டித ஸ்ரீதிவாகாந்த சர்மா ஸம்ஸ்கிருதம், ஹிந்தியில் எழுதி, மும்பையில் 1917ல் வெளியிடப்பட்ட பழைய புஸ்தகம். தற்போது சென்னை குப்புஸ்வாமி சாஸ்திரி ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் பெரு முயற்சியால் கிடைக்கப்பெற்றது.)*

## ஸனாதத தர்மப்புதிர்கள் செப்டம்பர் வினாக்கள்

1. வேதங்களுக்கு புதிய பொருள் எழுதியவர்
2. நரகத்தின் மூன்று வாயில்கள்
3. வகுளாபரணர் யார்?
4. வைகுண்ட ஏகாதசியை ஒட்டி நடக்கும் உத்ஸவம்
5. க்ரீஷ்மருது எம்மாதங்கள்?
6. க்ருஷ்ணன் ருக்மணியின் பிள்ளை
7. குளிக்கப் போகும் போது சொல்லப்படும் ஸூக்தம்
8. ப்ரசேதஸ் யார்/
9. அத்புத திருவந்தாதி எழுதியது யார்/
10. மூன்று ஏஷணை (ஆசை)கள் யாவை?

## கலை(ந்த)ச் சொற்கள் ஆகஸ்ட் விடைகள்

1. குச்சிபுடி நடனம்
2. சமுதாய சிற்பிகள்
3. அமரகோசம்
4. ஈசாவாஸ்யமிதம்
5. வேதாந்த புஷ்கரம்.

## கலை(ந்த) சொற்கள் செப்டம்பர் வினாக்கள்

1. கா ந ந் டய்வதாழிரிவே
2. கயோம்ர்கமகௌஸுலஸம்
3. பொதொடண்ரழ்டிஆடிபர்வா
4. ஏசாண்ழம்சமுறுக்கும்
5. நககபங்தணமயே

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 16

முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்



அவர் ஒரு மருத்துவர். இங்கிலாந்தில் படித்துவிட்டு ஆன்மீகத்தில் நாட்டம்கொண்டு பாரதம் திரும்பி வந்து ஸ்ரீக்ருஷ்ண பக்தியில் லயித்து தன் பெரும் பகுதி நேரத்தை பூஜை லலிதா சஹஸ்ரநாம பாராயணம், நாம ஜபம் முதலியவற்றில் ஈடுபடுபவர். அவரது வெகு நாளைய கனவான பெரியவாளின் தர்சனமும் கிடைத்துவருகிறது.

தன்னை யாரென்று தெரிவிக்க ஆசையே இல்லாமல் அவரது தர்சனத்தை பெரும் பாக்யமாக கொண்டிருந்தவர். டாக்டர் காலை நான்கு மணிக்கு எழுந்து ஜபங்கள் செய்யும் பழக்கமுடையவர். ஒரு நாள் அவர் கனவில் பெரியவா தோன்றி உன் க்ருஷ்ண ப்ரேமை எப்படியுள்ளது? ''நீ தினமும் க்ருஷ்ணாஷ்டகம் பாராயணம் செய்'' என்று அருளினார். எழுந்தவுடன் தன் மனைவியிடம் இதைச்சொல்லி ஆனந்தப்பட்டார். க்ருஷ்ணாஷ்டகம் எந்த புத்தகத்திலும் அவருக்கு கிடைக்கவில்லை. இது நடந்து சுமார் இரு வாரங்கள் கடந்த பின் தன் சொந்த ஊரான ஆலப்புழைக்குச் சென்று ஒருவாரம் தங்கினார். அங்கு ஒரு நாள் அவர் கனவில் பெரியவா தோன்றி ஏன் க்ருஷ்ணாஷ்டகம் படிக்கவில்லை'' என்று வினவ கிடைக்கவில்லை என்று இவர் கூற உன் வீட்டில் ப்ரிஜ்ஜின் மேல் ப்ருஹத் ஸ்தோத்ர ரத்னாகரம் என்ற புத்தகத்தில் உள்ளது என்றார்.

உடனே வீடு திரும்பி தன் வீட்டில் ப்ரிஜ்ஜின்மேல் உள்ள புத்தகத்தில் க்ருஷ்ணாஷ்டகம் இருப்பதைக் கண்டார்.அன்று முதல் க்ருஷ்ணாஷ்டகத்தைப் படித்த பின் ஸ்ரீக்ருஷ்ண அர்ச்சனை செய்யும்போது முதல் நாமாவில் ஸ்ரீபெரிவாளுக்குத் துளசியை சமர்ப்பித்து தன் அர்ச்சனையை ஆரம்பித்து செய்து வந்தார். கனவிலும் வந்து ரக்ஷித்தார் பெரியவர்.

# புராணக் கதை

## காஞ்சி வாதூலன்

C ¸ uº© [ P Î ß ÷©õuÀ

அவந்தீ தேசம் பாரத நாட்டின் ஒரு முக்ய தேசம். அதை ஆவிக்ஷித் என்னும் அரசன் தர்மப்படி ஆண்டு வந்தான் மக்களுக்கு எந்த குறையையும் வைக்கவில்லை. மக்களும் தம்வர்ணப்படி வாழ்ந்து வந்தனர்.

துறவறத்தில் நாட்டம் கொண்ட அரசன் தன் மகன் மருத்தனிடம் அரசாக்ஷியை ஒப்படைத்துவிட்டு தன் மனைவியுடன் கானகம் சென்றான். மருத்தனும் சாஸ்த்ரப்படி மக்களைக் காத்து வந்தான். க்ஷத்ரிய தர்மப்படி யாகங்கள் செய்தான். வறியோர்க்கு ஈந்தான். அந்தணர்களைக் காத்தான். மக்களும் அறவழியில் நின்று அவனை ஓம்பினர். இப்படி இருக்கையில் அவனுடைய துறவறம் வாங்கிய பாட்டி அவனுக்கு ஒரு செய்தி அனுப்பினாள். (அவளும் தவம் செய்ய கானகம் ஏகினவள்)

மருத்தனே நீ என்ன அரசாக்ஷி செய்கிறாய்? மிக நல்ல அரசன் எனும் பெயர் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறயா? அரசனென்பவன் நாட்டின் எல்லா மூலைகளிலும் நடப்பதை அறிந்திருக்க வேண்டும். அதனாலேயே அரசனுக்கு ''சார சக்ஷுஸ்'' என்று பெயர். ஆவிக்ஷித்தின் பெயர் கெட்டுவிடுமோ என்று அஞ்சுகிறேன். இங்கு நானிருக்குமிடத்தில் ரிஷிகளின் ஏழுபுத்ரர்களை நாகங்கள் தீண்டியதால் இறந்துவிட்டனர். இவ்விஷயம் உனக்குத் தெரியாதா? இது தெரியாமல் என்ன ஆக்ஷி செய்கிறாய்? ரிஷிகளின் தவத்தினாலேயே நாகங்கள் தண்டிக்கப்படலாமென்றாலும், க்ஷத்ரியர்களாகிய நாம் தான் அதற்கு ப்ரதிவினை செய்ய வேண்டும். இது தெரிந்தவுடன் அவர்கள் இடர் களைய செய்ய வேண்டியதைச் செய்''

இப்படிப்பட்ட செய்தியைக் கேட்டவுடன் அதிர்ச்சி அடைந்த மருத்தன் வருத்தப்பட்டான். நல்ல அரசாக்ஷி தந்த போதும் இப்படி ஓர் அவப் பெயர் வந்து விட்டதே என்று என்ணி அவனுடைய பாட்டி இருக்குமிடம் ஏகினான். அவளிடம் ஆசீர்வாதம் வாங்கி கொண்டு ஆஸ்ரமத்திற்குச் சென்றான். இறந்த ரிஷி புத்ரர்களைக் கண்டான். பெரும் கோபம் கொண்டான். தன் நாட்டில் தன் அரசாக்ஷியில் இப்படி ஒரு அவலமா என்று நினைத்து 'இந்த நாகங்கள் அனைத்தையும் அழிப்பேன் '' என்று கூறி

அஸ்த்ரப் ப்ரயோகங்களை செய்யத் தொடங்கினான் . அவன் விட்ட அஸ்த்ர பலம் தாங்காமல் உலகின் மூலையில் இருந்த நாகங்கள் அனைத்தும் தகிக்கிப்பட்டவர்களாய் அலறி அலறி வீழ்ந்தன. செய்வதறியாமல் திரிந்தன. சில நாகங்கள் ஆவிக்ஷித்தின் மனைவியிடம் சென்று முறையிட்டு அபயம் கேட்டன. முன்பு ஒரு சமயம் அவைகளுக்கு வரம் அவள் அளித்திருந்ததால் தன் கணவனிடம் சென்று தம் மகன் மருத்தனிடமிருந்து நாகங்களைக் காப்பாற்ற வேண்டினாள். அவனும் மருத்தன் இருக்குமிடம் சென்று ''மருத்தா நிறுத்து உன் அடாத செயலை' என்றான்.

மருத்தனும் அவரை வணங்கி ''எது அடாத செயல் தந்தையே? ஒரு பாவமும் அறியாத ரிஷி புத்ரர்களை கொன்றது சரியான செயலா? தர்மமா? கூறுங்கள் இதை நிறுத்த நீங்கள் யார்? ஆவிக்ஷித் மகனே இவைகள் என்னிடம் ப்ராணபிக்ஷைக் கேட்டு வந்தன. அவர்களுக்கு அபயம் கொடுத்தவன் நான். அவர்களைக் காப்பது என் தர்மம்'' மருத்தன் '' உங்கள் செயலுக்காக மிகவும் வருந்துகிறேன்.

நாகங்கள் செய்த செயல் சாதரணமானதா? கொடிய செயல் அல்லவா? என் ஆளுகைக்கு உட்பட்ட ப்ரதேசத்தில் நடந்த வன் செயலுக்குத் தண்டனை கொடுப்பது என் தர்மம்'' ஆவிக்ஷித் '' நிறுத்து உன் பேச்சை. அபயம் என்று வந்தவர்களை காப்பது க்ஷத்ரிய தர்மம். நான் க்ஷத்ரியன், அவர்களைக் காப்பது என் தர்மம். இந்த நாகங்களைக் கொல்வதை நிறுத்து. இல்லையெனில் என் அஸ்த்ரத்துக்குப் பலியாகு.''

மருத்தன் '' அவர்கள் செய்த அடாத செயலுக்கு நீங்கள் ஆமோதனம் தருகிறீர்கள். இது தவறு. அவர்கள் பக்கம் பேசுபவர் யாராயினும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள், நமக்கு நடக்கும் இந்த யுத்ததில் நீங்களா நானா என்று பார்த்துவிடலாம்'' இப்படிப் பேசிக் கொண்டவர்கள் தங்கள் அஸ்த்ர பலத்தைக் காட்டி போரிட தொடங்கினார்கள். கணைகள் சீறிப்பாய்ந்தன. மாபெரும் இடர் வந்துவிடுமோ என்று பயந்த ரிஷிகள் அவர்களைச் சமாதானப்படுத்தினர்.

இதே போல் பயந்த நாகங்களும் எங்கள் குலத்தில் பிறந்த ஒருவனால் இப்படி நேரிட்டது. அதைப் போக்குகிறோம். '' என்று கூறி ரிஷி புத்ரர்களின் உடலிலிருந்து விஷத்தை எடுக்க அவர்களும் உயிர்பெற்றனர்.

ஆவிக்ஷித் மருத்தனை மெச்சிப் பாராட்டினான். தர்மத்திற்காக என் சொல்லையும் கேட்க மறுத்ததை ஸ்லாகித்து ஆசீர்வாதம் செய்து அனுப்பினான்.

(மார்கண்டேய புராணம்)

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த் யோகீந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

### அவித்யை

**அஸ்ய அஞ்யானஸ்ய ஆவரண விக்ஷேபனாமகம்**
**அஸ்தி சக்தித்வயம் ॥ 51**

இந்த அவித்யைக்கு ஆவரணம் விட்சேபம் என்று இரு சக்திகள் உள்ளன.

ஆவரணசக்திஸ்தாவத் அல்போபி மேகோ அனேகயோஜன

ஆயதாமாதித்யமண்டலம் அவலோகயித்ரு நயனபத

அபிதாயாகதயா யதா ஆச்சாதயதீவ ததா அஞ்யானம்

பரிச்சின்னமபி ஆத்மானம் அபரிச்சின்னம் அஸம்ஸாரிணம் அவலோகயித்ரு புத்தி அபிதாயகதயா

**ஆச்சாதயதீவ தாத்ருசம் ஸாமர்த்யம்ந ததுக்தம்**
**''கனச்சன்னத்ருஷ்டிர்கனச்சன்னமர்கம் யதா மன்யதே**

நிஷ்ப்ரபம் சாதிமூட:'' ததா பத்தவத் பாதி யோ மூடத்ருஷ்டே: ஸ நித்ய உபலப்திஸ்வரூபோ அஹமாத்மா

இதி ஹஸ்தாமலகம்

ஒரு சின்ன மேகம் எப்படி பார்ப்பவனுக்கு சூர்யனை மறைப்பதுபோல அறியாமையால் புத்தியில் தோன்றும் அவித்யை எங்குமிருக்கும் ஆத்மாவை மறைக்கும். இது ஆவரண சக்தி. சூர்யனை மேகம் மறைப்பதுபோல மனிதன் தான் பந்தத்திலிருப்பது போல அவித்யை தன் ஆவரண சக்தியினால் பரமாத்மாவை மறைக்கும். நித்யம் இந்த ஆத்மா கிடைக்கப்பட்டிருந்தாலும் பந்தத்திலுள்ளது போல் தோன்றும். (ஹஸ்தாமலகர்)

**அனயா ஆவ்ருதஸ்யா ஆத்மன: கர்த்ருத்வ போக்த்ருத்வ**
**ஸுகித்வ துக்கித்வாதி ஸம்ஸார ஸம்பவானி பவதி யதா**
**ஸ்வ அஞ்யானேன ஆவ்ருதாயாம் ரஜ்வாம் ஸர்பத்வஸம்**
**பவதா ॥ 53**

இப்படி ஆவரண சக்தியினால் மூடப்பட்ட ஆத்மா தன்னை கர்தா என்றும் போக்தா என்றும் ஸுக துக்கங்களில் ஈடுபட்டு (கயிற்றில் தோன்றும் பாம்புபோல்) உழலும்.

# ருத்ர கீதை

*சின்னவன்*

**க்ரிகாலாபைரிதமேவ யோகின: ஸ்ரத்தான்வித:ஸாது யஜந்தி சித்தயே**
**பூதேந்த்ரியாந்த;கரணோபலக்ஷிதம் வேதே ச தந்த்ரே ச த ஏவ கோவித:**

*வேதங்களிலும் சாஸ்த்ரங்களிலும் நிபுணர்களான கர்மயோகிகள் பஞ்சபூதங்கள், இந்த்ரியங்கள் மனம் இவைகளுக்கு ஸாக்ஷியான இந்த பரமாத்ம ஸ்வரூபத்தையே கார்யங்கள் வெற்றியடைவதற்கு பலவிதமான கர்மாக்களால் நன்கு பூஜிக்கிறார்கள்.*

**த்வ்மேக ஆத்ய: புருஷ:ஸுப்தஸக்திதயா ரஹ:ஸத்வத்தமோ விபித்யதே**
**மஹானஹம் கம் மருதக்னிவார்தரா: ஸுரர்ஷயோ பூதகணா இயம் யத: ।।**

*தாங்கள் முதன் முதலில் செயலற்ற மாயா சக்தியுடனிருந்தீர்கள். அந்தச் சக்தியினால் ரஜஸ் சத்வ தமோ குணங்கள் தோன்றுகின்றன. இதன் மூலம் மஹத், அஹங்காரம் ஆகாயம் முதலான பஞ்சபூதங்கள், தேவர்கள் ஸ்தூல பூதங்கள் என்றுள்ள இவையாவும் தோன்றின.*

**ஸ்ருஷ்டம் ஸ்வசக்த்யேதம் அனுப்ரவிஷ்ட:ஸ துர்விதம் புரமாத்மாம் சகேன**
**அதோ விதுஸ்தம் புருஷம் ஸந்தமந்தர்புங்க்தே ஹ்ருஷீகைர் மது ஸாரகம் ய: ।।**

*தனது மாயா சக்தியினால் படைக்கப்பட்ட நான்கு வகையாய் உள்ள சரீரங்களுள் தன் ஒரு அம்சமாகக் புகுந்து கொண்டார். அக்காரணத்தாலேயே உள்ளேயிருக்கும் ஜீவனை பகவானாகவே உணர்கிறார்கள். இந்த ஜீவன்தான் இந்த்ரியங்களால் தேனடையிலுள்ள தேனைப் போன்ற விஷய ஸுகத்தை அனுபவிக்கிறான்.*

**ஸ ஏவ லோகானதிசண்டவேகோ விகர்ஷதி த்வம் கலு காலயான:**
**பூதானி பூதைரனுமேயத்தத்வோ கனாவலீர்வாயுரிவாவிஷஹ்ய: ।।**

*பெரும் காற்று மேகக்கூட்டங்களை விலக்குவது போல் ஸ்தூல ஸூக்ஷ்ம, காரணப் பொருளாக ஊகிக்கப்பட்டவரும், மிகவேகம் கொண்டவரும், ஊழியாக இருப்பவரும் ஆகிய தாங்கள் அல்லவா உலகமனைத்தையும், பூதங்களனைத்தையும் ஒடுக்கிக் கொள்கிறீர்கள்.*

**ப்ரம்த்தமுச்சைரிதிக்ருத்யசிந்தயா ப்ரவ்ருத்தலோபம் விஷயேஷு லாலஸம்**

**த்வமப்ரமத்த: ஸஹஸாபிபத்யதே க்ஷுல்லேலிஹானோ அஹிரிவா ஆகுமந்தக:**

*பசியினால் நாக்கைச் சப்பு கொட்டுகின்ற ஸர்பம் எலியை நோக்கி பாய்வதுபோல் மிகுந்த அஜாக்ரதையுள்ளவனும் விஷயங்களை இப்படி அப்படி செய்ய கவலையுடன் விஷய ஸுகங்களில் ஈடுபட்டவனும் ஜீவன் மேல் தாங்கள் ஜாக்ரதியுடன் யமன் வடிவத்தில் தாக்குகிறீர்கள்.*

**கஸ்த்வத்பதாப்ஜம் விஜஹாதி பண்டிதோ யஸ்தேஅவமான வ்யயமானகேதன:**

**விசங்கயாஸ்ஸ்மத்குருர்சரதி ஸ்ம யத் வினோப்பபத்திம் மனவச்சதுர்தச ॥**

*தங்களை அவமதிப்பதால் சிறுமையான உடலின் தன்மையுடைய எப்பண்டிதன் தங்களின் பாதாம்புஜத்தை விடுவான். எதை தங்கள் தந்தை ப்ரம்மதேவர் ஐயமின்றி பூஜித்தாரோ 14 மனுக்களும் ஆக்ஷேபணையின்றி பூஜித்தனரோ அத்திருவடிகளை எவன் மறப்பான்?*

**அத தவமஸி நோ ப்ரஹ்மன் பரமாத்மன் விபச்சிதாம்**

**விஸ்வம் ருத்ரபயத்வஸ்தம் குதஸ்சித் பயாகதி: ॥**

*ஆகையால் பரமாத்வே உலகம் யாவும் பயங்கர சூழ் நிலைக்கு உட்பட்டதென நன்கு அறிகின்ற எங்களுக்கு தாங்கள் பயமின்றி அடைக்கலப் பொருளாக விளங்குகிறீர்கள்.*

*(தொடரும்)*

# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்



**வைரிஞ்சிசௌகை: விஷ்ணுருத்ரேந்த்ர ப்ருந்தை;**
**துர்கா காலீ பைரவி சக்தி ஸங்கை:**
**யந்த்ரேஸி த்வம் வர்தே ஸ்தூயமானா**
**ந தத்ர ஸுர்யோ பாதி ந சந்த்ர தாரகம் ॥ 96**

*யந்த்ரேஸ்வரீ ப்ரம்ம விஷ்ணு இந்த்ர துர்கா காளீ பைரவீ ஆகிய கூட்டங்களால் துதிக்கப்படுகிறாய். உன் இருப்பிடமான அங்கு ஸுர்யனோ சந்த்ரனோ தாரகைகளோ ப்ரகாசிப்பதில்லை. (இவற்றுக்கு ஒளி அவள் தருகிறாள் என்று தாத்பர்யம்)*

**பூத்யை பவானி த்வாம் வந்தே ஸுரா; சதமகாதய:**
**த்வாமானம்ய ஸம்ருத்தாஸ்யுராயோ தாமானி திவ்யானி ॥ 97**

*பவானி இந்த்ரன் முதலிய தேவர்கள் உன்னை வணங்கிச் செல்வமுடையவர்களாய் சிறந்த ஸ்தானத்தை அடைந்தார்கள். எனக்கு செல்வமுண்டாக உன்னை நமஸ்கரிக்கிறேன்.*

**புஷ்பவத்புல்ல தாடங்காம் ப்ராதராதித்ய பாடலாம்**
**யஸ்த்வாமந்த: ஸ்மரத்யம்ப தஸ்ய தேவா அஸன்வசே ॥ 98**

*அன்னையே மலர்ந்த பூ போன்ற தாடகங்களையுடைய காலை ஸுர்யன் போல் சிவப்பாயுள்ள உன்னை தன்னுள் நினைத்தால் அவனுக்கு தேவர்களும் வசமாகின்றனர்.*

**வஸ்யே வித்ரும ஸங்காசாம் வித்யாயாம் விசதப்ரபாம்**
**த்வாமம்ப பாவயேத் பூத்யை ஸுவர்ணாம் ஹேமமலினீம் ।**

*அன்னையே ஒருவரை வசப்படுத்த வேண்டுமாயின் உன்னைப் பவழம் போன்ற காந்தியுள்ளவளாகவும், கல்வியில் சிறப்புப்பெற வெண்ணிறமானவளாகவும், செல்வம் பெற ஸ்வர்ணமாலை அணிந்தவளாயும் உன்னைத் த்யானிக்க வேண்டும்.*

*(தொடரும்)*

# பித்ரார்ஜிதம்

*அல்பஸ்ருதன்*

ஜீவ ப்ரம்ம ஐக்யம் ஞ்யானியின் ஆன்மா இவ்வுடலை விட்ட பின் அர்சராதி மார்கத்தில் செல்லும். ரவி மண்டலத்தில் ஊடே ஏகும். இவ்வண்டத்தை கடந்து பூ,புவ; ஸுவ;மஹ; ஜன; தப: ஸத்ய லோகங்களைத் தாண்டி அப்பால் செல்கிறான். புராணங்களின் படி ஆதிவாஹிகர்கள் எனும் தேவர்கள் வழி நடத்துவார்கள். ஜீவன் பரஞ் ஜோதியை அடைந்தபின் சொரூப விளக்கம் ஏற்படுகிறது. ப்ரம்ம குணங்களுடன் ப்ரகாசிக்கிறான்.

ராமானுஜரின் ஸ்ரீ வைகுண்டம் ராமானுஜரின் கருத்துப்படி விரசை ஆற்றில் குளித்து அமரர் எதிர் கொண்டழைக்க ஸ்ரீ வைகுண்டம் புகுந்து சங்குசக்ர சதுர்புஜ த்வாதச ஊர்த்வ புண்ட்ர வஸ்த்ராபரணங்களுடன் கூடிய திவ்ய சரீரம் பெற்றுத் திகழ்வர். திருமாமணி மண்டபத்தில் திருமால் அடியார் குழாங்களுடன் (நித்யஸூரிகள்) ஸதா ஸர்வ காலமும் அவனைப் பார்த்துக் கொண்டே ப்ரம்மானுபவமான பகவதனுபேயமாக இருப்பர்.

மத்வாசார்யரின் வைகுண்டம் இவருடைய கருத்துப்படி மோக்ஷமடைந்த பக்தரில் சிலர் ஸ்த்ரீ போகம் துய்த்திருப்பர், சிலர் ரத கஜங்களில் சவாரி செய்வர். சிலர் நால் வேதங்களால் பகவானை துதித்திருப்பர், சிலர் வேள்வி செய்தபடி இருப்பர். சிலர் ஹாவு ஹாவு என்று வேத ஒலிகளை முழங்குவர். சிலர் பித்ருக்களை நினைத்த மாத்ரத்தில் காண்பர். சிலர் தாண்டவம் ஆடுவர். வாத்யங்களை வாசிப்பர். ஆக அனைவரும் மத்வ குரு பரம்பரைக்கு தாஸர்களாகி தம் தம் தகுதிக்கு எற்றார் போல் மோக்ஷானுபவம் பெறுவர்.

ஆதி ஸங்கரரின் மோக்ஷ நிலை ஆதி சங்கரரின் கருத்துப்படி ப்ரம்மம் தான் உண்மை, உலகம் மாயை ஒரு தோற்றமே. ஞ்யானம் வந்தவுடன் ஜீவன் முக்தனாகி விதேஹ முக்திக்குப்பின் ஜீவன் பரமாத்மாவில் ஒடுங்கும். சிதானந்த ஸ்வரூபமாகும். பாம்பு கயிற்றில் கரைந்தது போலவும் ஆனை கல்லில் மறைந்தது போலவும் மட ஆகாசத்தில் கடாகாசம் கலந்தது போலவும் பரமாத்தில் லயமடையும். அதற்குப்பின் பேச்சுக்கு இடமேது? புறத்தோற்றங்களான ப்ரபஞ்சம் கானல் நீர் போல் மறையும். பரமாத்வான பரப்ரம்மமே ப்ரகாசிக்கும். ஜீவன் ப்ரம்மமாகிவிட்டது. அது இம்மண்ணுக்கு திரும்பி வருவதில்லை. இனி பிறவா நிலை எய்திவிட்டது என்று இருமுறை சொல்லி வலியுறுத்துகிறது ப்ரம்மஸூத்ரம். (தொடரும்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

**ததோ பீமோ வனம் கோரம் ப்ரவிஸ்ய விஜனம் மஹத்**
**தத்ர நிக்ஷிப்ய தான் ஸர்வான் ஜஜகார ஸ்வயம் ததா ।।**

*பயங்கரமான வனத்தை அடைந்த பீமன் தன்னுடன் இருப்பவர்களை அங்கு இருக்கச் செய்து தான் மட்டும் விழித்திருந்தான்.*

**தத்ர தேஷு சயானேஷு ஹிடிம்போ நாம ராக்ஷஸ; ।**
**அப்யத்ரவத ஸம்க்ருத்தோ பீமஸேனமரிந்தமம்**
**நிக்ருஹ்ய தம் பலாத் பீம: பசுமாரமாரயத் ।।**

*அவர்கள் அங்கு தூங்கிக் கொண்டிருக்கையில் ஹிடிம்பன் என்னும் அரக்கன் பராக்ரமசாலியான பீமனுடன் யுத்தம் செய்தான். ஒரு ப்ராணியைக் கொல்வது போல் பீமன் அவனை வதம் செய்தான்.*

**ஹிடிம்பா பகினீ தஸ்ய பீமஸேனமபாஷத**
**அஹம் சுஸ்ரூஷுரிச்சாமி தவ காத்ரம் நிஷேவிதும் ।।**

*ஹிடிம்பனின் தங்கை ஹிடிம்பா நான் உமது உடலுக்கு சேவை செய்ய விரும்புகிறேன்'' என்று பீமனிடம் கூறினாள்.*

**ப்ரஜஜ்ஞே ராக்ஷஸீ புத்ரம் பீமஸேனான்மஹாபலாத்**
**ஸத்யோ ஹி கர்பம் ராக்ஷஸ்யோ லபந்தே ப்ரஸவந்தி ச ।।**

*பீமஸேனனால் கருதரித்த அரக்கி உடனே ஒரு குழவியை ஈன்றெடுத்தாள்.*

**தத்ர தே ஸாயுதாஸ்ஸர்வே வசந்தி ஸ்ம க்ஷபாம் (ன்ருப)**
**விஸ்வஸ்ததவிஸ்வஸ்தா வஞ்சயந்த: புரோசனம் ।।**

*கடோத்கசனாகிய அவன் நான் உமக்குத் தேவைப்படும்போது வருவேன் என்று அவர்களிடம் கூறி வடக்குத் திசைக்கு சென்றான்.*

**யதா மாம் ஸம்ஸரேர்பூய ஆகந்த்யாசு பாரத**
**இதி ஸா பாவமாஸஜ்ஜ ஸ்வாம் கதிம் ப்ரத்யபத்யத ॥**

பாரதனே எப்போது நீ என்னை நினைக்கிறாயோ அப்பொது நான் வருவேன் என்று ஹிடிம்பியும் கூறி சென்றாள்.

**ததஸ்தே பண்டவஸ்ஸர்வே பிப்ரதஸ்தாபஸம் வபு:**
**ஏகசக்ராம் கதா ஊஷுர்ப்ராம்மணஸ்ய நிவேசனே ॥**

பாண்டவர்களும் தாபஸ வேடம் தரித்துக் கொண்டு ஏகசக்ர புரத்தில் ஒரு ப்ராம்மணனின் வீட்டில் வசித்தனர்.

**பைக்ஷ்யம் சரந்தஸ்து ததா ஜடிலா ப்ரம்மசாரிண:**
**பபூவுர் நாகராணாம் ச குணைஸ்ஸம்ப்ரியதர்சின: ॥**

ஜடிலர்களாக பிக்ஷை எடுத்துகொண்டு அறவழியில் இருந்ததால் மக்களின் அன்புக்குப் பாத்ரமானார்கள்.

**ஸமீபே நகரஸ்யாஸ்ய பகோ வசதி ராக்ஷஸ:**
**த்னோபஸ்ர்ஷ்டா நகரீ த்ராதாரம் நாதிகச்சதி ॥**

அஞ்ஞானத்தின் அருகில் இருந்த பகன் எனும் அசுரனால் ஆக்ரமிக்கப்பட்ட அந்த நகரம் ரக்ஷகனில்லாமல் இருந்தது.

**ஆஸாத்ய து வனம் தஸ்ய பகம் பீமோ பபஞ்ச ஹ**
**தத: ப்ர்ப்ருதி ரக்ஷாம்ஸி தத்ர ஸௌம்யானி பிரார்தே ॥**

அவ்வனத்துக்குச் சென்ற பீமன் பகாசுரனைக் கொல்ல அதிலிருந்து ராக்ஷசர்கள் ஒழுங்காக இருந்தனர்.

**வஸத்ஸு தேஷு ப்ரச்சன்னம் வ்யாஸஸ்தான் முனிரபவீத் ॥**

அவர்கள் அங்கு மறைந்து வாழ வ்யாஸமுனிவர் அவர்களிடம் கூறினார்.

**ஆஸீத்தபோவனே காசித் ருஷே: கன்யா மஹாத்மன:**
**நாத்யகச்சத்பதிம் ஸா து கன்யா ரூபவதீ ஸதீ ॥**

இந்த தபோவனத்தில் ஒரு ரிஷியின் பெண் ரூபவதியாக இருந்தும் மணமகன் கிடைக்காமல் இருந்தாள்.

**தோஷயாமாஸ ஸா தபஸா கிலோக்ரேண சங்கரம்**
**தாமத ப்ரத்யுவாச இதமாசீனோ வததாம் வர:**
**பஞ்ச தே பதயோ பத்ரே பவிஷ்யதீதி பாரத ।।**

*அவளும் சிவனை உக்ர தவத்தினால் ஆராதிக்க அவரும் உனக்கு ஐந்து பதிகள் இருப்பர் என்று பதிலுரைத்தார்.*

**த்ருபஸ்ய குலே ஜஞ்யே ஸா கன்யா தேவரூபிணீ**
**நிர்திஷ்டா பவதாம் பத்னீ க்ருஷ்ணா பார்ஷத்யனிந்திதா**
**ஸுகினஸ்தாமனுப்ராப்ய பவிஷ்யத ந ஸம்சய: ।।**

*அவள் துருபதனுக்கு மகளாகப் பிறந்திருக்கிறாள். அந்த க்ருஷ்ணா என்பவள் உங்களுக்காக பிறந்தவள். அவளை அடைந்து மகிழ்ச்சி அடைவீர்கள்.*

**ப்ரயயுர் த்ரௌபதீம்த்ரஷ்டும் பாஞ்சாலான் பண்டுனந்தன:**
**கும்பகாரஸ்ய சாலாயாம் நிவாஸம் சக்ரிரே ததா ।।**

*பாண்டவர்கள் த்ரௌபதியைப் பார்க்க பாஞ்சாலத்திற்கு ஏகினர். அங்கு அவர்கள் ஒரு குயவன் வீட்டில் வாஸம் செய்தனர்.*

*(தொடரும்)*

ஜய ஜய சங்கர    உ    ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# ஹிந்து மத ப்ராமண நூல்கள்

ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா

## தர்ம சாஸ்த்ரங்கள்

தர்ம சாஸ்த்ரங்கள் தர்மம் என்ற பதத்திற்கு தரிப்பது என்று பொருள். அவரவர் கடமையைச் செய்யும்படி சாஸனம் செய்வதால் அந்நூலுக்கு தர்ம சாஸ்த்ரம் என்று பெயர். அதை ஸ்ம்ருதி என்றும் சொல்வார்கள். வேதத்தின் உட்கருத்தை நினைத்து எழுதியதால் அப் பெயர் அதற்குப் பொருந்தும்.ஒரு மனிதன் பிறந்தது முதல் முடிவு வரை செய்துகொள்ள வேண்டிய நாற்பது ஸம்ஸ்காரங்கள் இதில் அடங்கும். ஜீவனைச் சுத்தப்படுத்தவே ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டன.சில கர்மாக்கள் தகப்பனாலும் சில தன்னாலும் சிலபுத்ரனாலும் செய்யத்தக்கன. இந்த ஸம்ஸ்காரங்களும், வர்ணதர்மங்களும், ஆஸ்ரமதர்மங்களும் விசாலமாக ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டுள்ளன.

வர்ணங்கள் ப்ராம்மண,க்ஷத்ரிய,வைஸ்ய, சூத்ர என நான்குவர்ணங்கள்.இவை விராட்புருஷனிடமிருந்தே தோன்றின.விராட் புருஷனின் முகத்திலிருந்து ப்ராம்மணன்,புஜங்களிலிருந்து க்ஷத்ரியன்,தொடைகளிலிருந்து வைஸ்யன் பாதங்களிலிருந்து சூத்ரன் என்று தோற்றம்.

அவரவர் உண்டான இடத்துக்குத் தக்கபடி கடமைகள் அமைந்துள்ளன. வேதம் ஓதுதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல் வேள்வி செய்வித்தல்,தானம் ஏற்றல், தானம் கொடுத்தல் இவை ஆறும் ப்ராம்மணனின் கடமை.

யாகம், தானம், அத்யயனம்,தர்மமாக ப்ரஜைகளைப் பரிபாலித்தல் க்ஷத்ரியனின் கடமை.

யாகம், அத்யயனம், தானம், பசுரக்ஷணம், உழவு வ்யாபாரம் இவை வைஸ்யனின் கடமை. உழவு, மேற்சொன்னவருக்கு தொண்டு புரிவது சூத்ரனின் கடமை. முதல் மூன்று வர்ணத்தாரும் த்விஜர் எனப்படுவர். தாயின் வயிற்றிலிருந்து பிறப்பது மட்டுமல்லாமல் வேத கர்மாக்களால் இரண்டாம் முறை பிறப்பதால் ''த்விஜர்'' எனப்படுவர்.

ஆஸ்ரமங்கள் ப்ரம்மசர்யம், க்ருஹஸ்தாஸ்ரமம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம் என ஆஸ்ரமங்கள் நான்கு. உபநயனம் எனும் ஸம்ஸ்காரம் ஆனபின் குருகுலம் சென்று நியமாக வித்யாப்யாஸம்செய்வது முதலாஸ்ரமம்.

உத்தமகுலத்திலுதித்த நல்ல கன்னிகையை மணந்து இருவரும் அக்னி, அதிதி பூஜை, பஞ்ச மஹா யஞ்யம் செய்தல் இரண்டாம் ஆஸ்ரமம்.

தர்மபத்னியுடன் காட்டிற்குச் சென்று தவம் புரிதல் மூன்றாமாஸ்ரமம். பொருள் மக்கள் எல்லாவற்றையும் துறந்து பிக்ஷை எடுத்து வேதாந்த விசாரம் செய்து பரம்பொருள் காண விழிவது நான்காமாச்ரமமாம் .

இந்த நிலையும் பஹூதக குடீச, ஹம்ச, பரமஹம்ஸ, பரிவ்ராஜக என்று பக்குவத்திற்கேற்றாற் போல் பிரிக்கப்பட்டுள்ளது. அந்தந்த வர்ணத்தினர் காலை முதல் இரவு வரை என்ன செய்ய வேண்டுமென்பதை தர்மஸாஸ்த்ரங்கள் விரிவாகச் சொல்லும்.

மனு, யாஞ்ய வ்ல்கியர் ஹரீதர் அத்ரி, விஷ்ணு, நாரதர், பராசரர், கௌதமர் சங்கலிகிதர் தேவலர், பைடீனஸி ஆபஸ்தம்பர், காத்யாயனர், ப்ருஹஸ்பதி முதலானவர்கள் தர்மசாஸ்த்ரத்தின் கர்த்தாக்கள். ராமாயணமும் தர்மஸாஸ்த்ரமே. ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று கதாபாத்ரங்களின் வாயிலாக சொல்லும்.

வேதமும் சாஸ்த்ரமும் எனதாக்ஞ்யை என்று வாஸுதேவரே நேரில் தர்மானுஷ்டானம் செய்து காட்டியதால் ராமாயணத்தை வால்மீகி ஸ்ம்ருதி என்று சொல்வர்.

[தொடரும்]

# ஸ்ரீ ஜயதேவரின் கீத கோவிந்தமும் ஸ்ரீ நாரயணதீர்த்தரின் ஸ்ரீ கிருஷ்ணலீலாதரங்கிணியும்

## பாகம்-1

*ஸர்வஜ்ஞான க்ரியா சக்திம் ஸர்வ யோகீஸ்வர பரபம்*
*ஸர்வவேதமயம் விஷ்ணும் ப்ரபவிஷ்ணும் உபாஸ்மஹே*

*இவ்வுலகத்தினர் அனைவருக்கும் அறிவு செயல் இவைகளுக்கான திறமையை அளிப்பவர். இவ்வுலகத்திலுள்ள யோகிகள் அனைவருக்கும் தலைவர், எல்லோராலும் அவசியம் அறியப்பட வேண்டிய உண்மைப் பொருளை அறிந்தவர். இவ்வுலகமனைத்தையும் ஆட்டி வைக்கும் சிறந்த நாயகனாக இருப்பவர். அத்தகைய எங்கும் நிறைந்த மஹாவிஷ்ணுவை உள்ளத்தால் தியானிக்கிறேன்.*

### பரப்ரஹ்ம ஸ்வரூபம்

*1. ஸச்சிதானந்த ஸ்வரூபமான பரப்ரஹ்மத்துடன் ஒன்றாகி ஐக்யமடைவதான பக்தி பரவசத்தையே உபநிஷத்துக்கள் ஸாதனா மார்கத்தின் உச்சக்கட்டமாக விவரிக்கின்றன. அந்த ப்ரஹ்ம தத்துவத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. மேலும் மற்றொன்றுடன் ஒப்பிட்டுக் கூற இயலாது. அது காலதேச வர்த்தமானத்திற்கு கட்டுப்படாததொன்று எவ்வளவோ முயன்றும் வேதங்களாலும், உபநிஷத்துக்களாலும் வர்ணிக்க முடியாததொன்று அதைப்பற்றி விவரிக்குங்கால் அது இப்படித்தான் இருக்கும் என்று சொல்லாமல் நேதி, நேதி இதுவல்ல, இதுவல்ல என்று இதரவஸ்துக்களுக்கு விலக்காகத்தான் வர்ணிக்கப்பட்டுள்ளது. இப்படி 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ' என்றபடி மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதது பரப்ரஹ்ம ஸ்வரூபம்.*

*2. இந்த பஞ்சபூதங்களாலான சரீரமும் ஜகத்தும் அழிவுள்ளவை நான். எனது என்ற எண்ணத்தால் அவைகளுடன் ஒன்றுபடும் நிலைகளும், தோற்றங்களும், எண்ணங்களும் அவ்வாறே அவைகளுக்கெல்லாம் ஆதாரமாக மாற்றம் இல்லாத சாக்ஷியாக ஸ்வயம் ப்ரகாசமாக விளங்குவதே தன்னுடைய உண்மையான ஸ்வரூபம் என்ற த்ருடமான முடிவுடன் அப்யாச அதிசயத்தினால் ஜீவன், ஸதா அவ்விதமான நினைவுடன் பரப்ரஹ்மத்தோடு இரண்டறக் கலப்பதையே மோக்ஷம் என்று சொல்லப்படுகிறது.*

*நாஹம் தேஹோ சான்யோஸ்மி ப்ரஹ்மைவாகம் ந சோகபாக்*
*ஸச்சிதானந்த ரூபோஹம் நித்யமுக்த ஸ்வபாவான்*

*3. இப்படி தன்னுடைய ஜீவனானது பரப்ரஹ்மமே என்ற ஐக்ய பாவமான பேருண்மையை அறிவதனால்தான் அக்ருத்ரிம புருஷார்த்தமான மோக்ஷத்தை அடையலாம். ஸ்வ விமர்ச புருஷார்த தன்னுடைய உண்மையான இந்த ஸ்வரூபத்தை அவித்யா மாயையினால் மறந்து மயங்கிக் கிடக்கும் மனுஷ்யனானவன். அப்படி மறந்து போன ஸ்வரூபத்தை அறியப் பெறுவதுதான் ஞானத்தின் முடிவு. மேற்சொன்ன மாயை ஸத்வ ரஜோ தமோ எனும் முக்குணங்களின் வாயிலாக நாம ரூப குணங்களோடு ஜகத்தாகவும், ஜீவனாகவும் பரிணமிக்கிறது.*

*4. சத்வ குணம் எனப்படுவது மற்ற குணங்களாகிற ரஜோ, தமோ குணங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு சுத்தமானதாக இருக்கிறது. வேதவ்யாசர் தன்னுடைய பல புராணங்களின் வாயிலாக, பரப்ரஹ்மமும், மாயையும் சேர்ந்து ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற முத்தொழிலைச் செய்ய, பல ரூபங்களை ஏற்றுக் கொண்டு பல நாமங்களால், அழைக்கப்பட்டு குணங்களிலிருந்து வேறுபட்டு, சுத்த சத்வ ஸ்வரூபத்துடன் அவதாரம் என்ற தொழிலை ஏற்றுக் கொள்கிறது என்று தெரியப்படுத்தி உள்ளார்.*

*5. ஸ்ரீமத் பாகவத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் தேவகியின் கர்பத்தில் ஆவிர்பவிக்கும் சமயம், தேவர்களுடன், ப்ரஹ்மா, மஹாவிஷ்ணுவின் அவதார தத்வத்தையும், நோக்கத்தையும் கீழ்கண்டவாறு ஸ்துதி செய்கிறார். தாமரைக்கண்ணா! சுத்த ஸத்வ ஸ்வரூபியான தங்களிடத்தில் சமாதி நிலையில் ஸ்திரமாக வைக்கப்பட்ட மனத்தினால் மனோபலம் அடையப் பெற்ற ஒரு சிலரே! நின் திருவடியாகிற மரக்கலத்தால், ஸம்ஸார சாகரத்தை பசுங்கன்றின் குளம்படி போல் எளிதில் தாண்டுகிறார்கள். (பாகவதம் ஸ்கா. 10 அத்யா.2 ஸ்லோ 30)*

*6. மேலும் இந்த ப்ரஹ்ம ஸ்துதியில் பகவானுடைய அவதார தத்வத்தை விளக்குங்கால், "எல்லா ஜீவராசிகளிலும் அந்தர்யாமியாக ஒளியாகப் ப்ரகாசிப்பவனே ப்ரகிருதி வசத்தால் மறைக்கப்பட்ட ஜீவாத்மாக்கள் அந்த ஒளியான ப்ரகாசத்தினாலேயே, தங்களுடைய மனோ, வாக், காயங்களால், உலக அனுபவத்தை அடைகின்றன என்று அறிவதில்லை. அந்த மாயையை உன் வசத்தில் வைத்துக் கொண்டு மேலும் ஸத்ம் விஸுத்தம் (ரஜோ, தமோ, குணங்கள் கலக்காத) உன் சுத்த சத்வரூபத்தோடு அதர்மத்தை அழிக்க அவ்வப்போது தோற்றம் அடைகிறீர். அந்த அவதார தத்துவத்தையும் நாம ரூப, குணங்களையும் விவரிக்க இயலாது. அவை ப்ரத்யக்ஷம், அனுமானம் முதலிய ப்ரமாணங்களால் அறியக்கூடியவை அல்ல. ஆயினும் அனன்ய பக்தியாலும், இடைவிடா*

முயற்சியால் அடையப் பெற்ற சுத்த மனத்தில் நின் அருளால், அந்த நாமரூப குணங்களை ஜீவர்களுக்கு அனுபவபூர்வமாய் உணர்த்துகிறீர்கள்'' இந்த ஸ்துதியினால் வ்யாச பகவான் நமக்கு பக்திமார்கமே ஞானத்தை அளித்து மோக்ஷத்தை அளிக்க வல்லது என்று விளக்குகிறார். பக்தியற்ற ஞானம், மேல் உலகங்களில் தாற்காலிமாக, சுகத்தையளித்து திரும்பவும் மறுபிறப்பையும் அளிக்குமே தவிர ஸம்ஸாரஸாகர சூழலிலிருந்து விடுவிக்காது என்று அறுதியிட்டு கூறுகிறார். (பாகவதம் ஸ்கா. 10. அத்யா 2 ஸ்லோ 35 - 37)

7. அப்படிப்பட்ட ஸச்சிதானந்தப் பரம்பொருளை விட்டகலாத கிருஷ்ண பக்தியே ராஸலீலையில் கோபிகைகள் ஸ்ரீ கிருஷ்ணனோடு அனுபவித்த பரமானந்தம். அதுவே பக்தன் பகவானுடன் அனுபவிக்கும் பரமானந்தம் அதுவே முக்தனுடன் சேர்ந்து முமுக்ஷுக்கள் அனுபவிக்கும் ப்ரஹ்மானந்தம்.

8. அப்படிபட்ட ப்ரஹ்மானந்தத்தில் மூழ்கி திளைத்த மஹான்கள் பலருண்டு. அவர்களில் பாகவத ஸமுதாயம், என்றென்றும் மறக்காமல் ஆராதித்துவரும் ஸ்ரீ ஜயதேவ கவியும், ஸ்ரீ நாராயண தீர்த்தரும் முக்கியமானவர்கள் அவர்கள் அப்பரம்பொருளை அறிந்து, தான் என்ற பாவம் ஒழிந்து, அதனுடன் இரண்டறக் கலந்து பரிபூரண ஆனந்தத்தை அனுபவித்தனர். 'ஏகம் ஸ்வாது ந பஞ்ஜீத' என்ற கூற்றுப்படி தான் அனுபவித்த அந்த பரமானந்தத்தை மற்ற பாமரமக்களும் அனுபவித்து மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைய வேண்டும் என்ற பரமகருணையால் தங்களுடைய ஆனந்த அனுபவங்களை தங்களின் தெய்வீகப் பாடல்கள் வாயிலாக வெளிப்படுத்தி நம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். நாம் இப்பாடல்களைப் பாடும் போதும், மற்றவர்கள் பாடி கேட்கும் போதும் நம்மை மறந்த நிலையில் பரவசமாகி ஆனந்தக்கண்ணீர் வடிப்பதும் தக்க ப்ரமாணமாகும் என்பதில் ஐயமே இல்லை.

9. 'ஸ்ரீ ஜயதேவர் கீத கோவிந்தம்' என்ற நூலையும் ஸ்ரீ நாராயணதீர்த்தர் ஸ்ரீ கிருஷ்ண லீலாதரங்கிணி என்ற நூலையும் படைத்து தாங்கள் ருசித்த பரமானந்த ரஸத்தை பாமரமக்களும் ருசித்து அனுபவிக்க ராக, தாளங்களுடன் கூடிய ஜனரஞ்சகமான பாடல்களாக அருளிச் செய்தார்கள். இக்கட்டுரை 3 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1ம் பாகத்தில் ப்ரஹ்ம ஸ்வரூப விளக்கமும், 2ம் பாகத்தில் நூல்களும் அதன் ஆசிரியர்களும் என்ற தலைப்பில் ஸ்ரீ ஜயதேவரின் கீத கோவிந்தம், ஸ்ரீ நாராயணதீர்த்தரின் ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி என்ற நூல்களின் சிறப்புகளைப் பற்றியும் 3ம் பாகத்தில் ஒற்றுமையும், வேற்றுமையும் என்ற தலைப்பில் இந் நூல்களின் இடையே உள்ள

ஒற்றுமையும், வேற்றுமையும் விவரிக்கப்பட்டுள்ளன. நாமும் இப்பாடல்களின் உட்பொருள் அறிந்து, அந்த அமிர்தரஸத்தை முடிந்தவரை பருகி அனுபவிக்க முதற்கண் இந்நூல்களின் காவியத் தலைவனான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்ம ஸ்வரூபியான வராஹபுரி ஸ்ரீ தேவி பூமி தேவி ஸமேத ஸ்ரீ வேங்கடேச பெருமாளையும், ஸ்ரீ ஜயதேவ கவியையும் ஸ்ரீ நாராயண தீர்த்தரையும் வணங்கி வழிபடுவோமாக.

## பஞ்ச மாதங்க கணபதினா

ராகம் மலஹரி தாளம் ரூபகம்



பஞ்சமாதங்கமுக கணபதினா பரிபாலிதோஹம்
ஸுமுகேன ஸ்ரீ (பஞ்ச)

**அனுபல்லவி**

பஞ்சபூதாத்மகப்ரபஞ்சோதயாதிகரண
வ்ரிஞ்சிஹரிருத்ர நுதேன பஞ்சவக்த்ர
சிவஸுதேன (பஞ்ச)

**சரணம்**

வரதாபயபாசஸ்ருணிகபாலதந்தமோதக
முத்கராக்ஷமாலா கரேண
கமலாபுரவிஹாரேண புருஹூதாத்யகில
தேவபூஜித விக்னேஸ்வரேண
வரகுருஹஸோதரேண
ஸுருசிரலம்போதரேண
கருணாங்கெளரதரேண கலிமலஹரணதரேண
(பஞ்ச)

ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர்

# அன்னதானத்தின் மகிமை

தர்மபுத்திரர் அசுவமேத யாகம் செய்வதற்கு அன்னதானம் ஏராளமாகச் செய்தார். அந்த அன்னதானத்தைச் சபையோர்கள் அனைவரும் புகழ்ந்தனர். அச்சமயம் ஒரு பக்கம் தங்கமாய் பிரகாசித்த சரீரத்துடன் கூடிய ஒரு கீரிப்பிள்ளை அங்கு வந்து, ''குருக்ஷேத்திரத்தில் மாவைக் கொடுத்த உஞ்சவவ்ருத்தி பிராமணனுடைய தானத்திற்கு இந்த யாகம் ஈடாகாது'' எனச் சொல்லிற்று. இதைக் கேட்ட சபையோர்கள் ஆச்சரியமடைந்து அக்கீரிப்பிள்ளையைப் பார்த்து, ''நீ யார்? நீ ஏன் இப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டார்கள். கீரிப்பிள்ளை பின்வருமாறு சொல்லிற்று :-

குருக்ஷேத்திரத்தில் உஞ்சவ்ருத்தி செய்து பிழைக்கும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவனுடைய குடும்பத்தில் அவன் மனைவி, புத்ரன், மாட்டுப் பெண் ஆகிய மூவர் இருந்தனர். இந்த பிராமணன் கொண்டு வருவதிலிருந்தே அவர்கள் ஜீவித்து வந்தனர். ஒரு சமயம் தேசத்தில் பஞ்சம் ஏற்படவே அவருக்கு கோதுமை மாவுதான் கொஞ்சம் கிடைத்தது. அதை நான்கு பாகமாகச் செய்து சாப்பிட ஆரம்பித்தார்கள். அந்த சமயம் ஒரு விருந்தாளி வந்து சேர்ந்தார். பிராமணன் அவரை உபசரித்து தன்னிடமிருந்த தன் பங்கு மாவைக் கொடுத்து சாப்பிடச் சொன்னார். வந்த விருந்தாளிக்கு அதைச் சாப்பிட்டும் பசி தீரவில்லை. அவருடைய ஸ்திதியைப் பார்த்த பிராமணன் மிகவும் வருத்தமடைந்தார். இதைப் பார்த்த அவர் பத்தினி தன் பாகத்தையும் விருந்தாளிக்குக் கொடுத்தாள். அதைத் தின்றும் அவர் பசி தீரவில்லை. பிறகு பிராமணனுடைய புத்திரனும் அவன் மனைவியும் தங்கள் பாகங்களையும் கொடுத்து விட்டார்கள். உடனே தேவலோகத்திலிருந்து புஷ்பவர்ஷம் பெய்தது. ''உங்கள் குடும்பத்தவரைப்போல் நான் கண்டதில்லை. தங்களுக்கென்று கொஞ்சங்கூட வைத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்துவிட்டீர்களே. உங்களுடைய தானமே தானம். நான் தர்ம தேவதை; உங்களைப் பரிசோதிக்க வந்தவன். உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் சுவர்க்க லோகம் அழைத்துச் செல்ல தேவர்கள் விமானத்துடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சுவர்க்கத்தையடைவீர்களாக'' என்று ஆசிகூறி மறைந்தார்.

அவர்கள் நால்வரும் விமானமேறி சுவர்க்க மடைந்தார்கள். அந்த மாவைச் சாப்பிட்ட சமயத்தில் கீழே உதிர்ந்த மாவும் ஜலமும் என்மேல் பட்டு என் சரீரத்தின் ஒரு பாகம் தங்க மயமாயிற்று. மற்றொரு பாகமும் அம்மாதிரியாகும் என்று நினைத்து அநேக யாகங்களுக்குப் போனேன். இந்த யாகத்திற்கும் ஆசையோடு வந்தேன்; ஆனால் என் சரீரத்தின் மற்ற பாகம் தங்கமாகவில்லை. அதனால் தான் இந்த யாகம் அப்பிராமணனுடைய மாவு தானத்திற்கு ஈடானதில்லை என்று சொன்னேன் என்றது.

இக்கதைகளில் சொல்லியபடி தனக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்ளாமலும், தன்னலம் பார்க்காமலும், ஜாதிமத வித்யாசம் பாராமலும், வந்தவருக்கு இல்லையெனாமல் ஈவது, ஸகல ஜீவராசிகளும் பகவானுடைய ஸ்வரூபம் என்று எண்ணி எல்லாவற்றினிடமும் கருணை காட்டுவதே மானிட ஜன்மமெடுத்ததின் பயனாகும்.

# அஜாமிளர்

கான்யகுப்ஜம் என்ற தேசத்தில் ஓர் அந்தணர் இருந்தார். அவருக்கு அஜாமிளர் என்ற ஒரே ஒரு குமாரர் இருந்தார். இவர் காலத்தில் வேத முறைப்படி உபநயனம் செய்விக்கப்பட்டு, குருவை அடைந்தார். அங்கு, வேதங்களைக் கசடறக் கற்றார். நற்குண நல்லொழுக்கங்களால் எல்லோருடைய அன்பிற்கும் பாத்திரமானார். அஜாமிளர் பிரம்மசாரிகளுக்குள்ள எல்லா விரதங்களையும் நன்கு அநுஷ்டித்து முடித்தார். இவருக்கு காலத்தில் திருமணமும் நடந்தது. தாய்தந்தையருக்கு ஊழியம் செய்வதையே தமது கடமையாகக் கொண்டிந்தார். இவ்வளவு சிறந்த குணமுள்ள அஜாமிளர் ஒரு நாள் தம் தந்தையின் கட்டளைப்படி பழங்கள், பூக்கள், ஸமித்து தர்ப்பம் இவற்றைக் கொண்டு வருவதற்காக வனத்துக்குச் சென்றார்.

அங்கு எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினார். வரும் வழியில் இழிகுலத்து ஒருவனைக் கண்டார். அவன் ஓர் தாசியுடன் வெட்கமில்லாமல் ரமித்துக் கொண்டிருந்தான். அந்தத் தாசியும் கள்ளைக் குடித்துக்கொண்டும், அந்த இழிகுலத்தோனை அணைத்துக்கொண்டும் இருந்தாள். இந்தக் காட்சியைக் கண்ட அஜாமிளர் மனத் தடுமாற்றமடைந்தார். மன்மத தாபம் கொண்டார். எவ்வளவு நற்குணமுள்ளவராக இருந்தும், மனத்தையும் புத்தியையும் கெடுக்கக்கூடிய காட்சிகளைக் கண்டதனால் விவேகம் அற்றவராக ஆனார். தமது அந்தண தர்மத்தை மறந்தார். அந்தத் தாசியினிடம் மோகம் கொண்டு தம் தந்தை சேர்த்து வைத்த செல்வங்களையும் அழித்தார். மிகச் சிறியவளான தமது மனைவியைத் துறந்தார். தாசியை ஸந்தோஷப்படுத்துவதற்காக மிகக் கீழான தொழில்களைச் செய்தார். இவருக்கு அந்தத் தாசியிடம் பத்துப் பிள்ளைகள் பிறந்தனர். கடைசிக் குழந்தைக்கு நாராயணன் எனப் பெயரிட்டார்கள். பெற்றோர்களுக்கு கடைசிக் குழந்தையிடம் அதிக அன்பு இருப்பது உலக இயற்கை. அதுபோல் அஜாமிளரும் தமது கடைசிக் குழந்தையான நாராயணனிடம் அதிக அன்பு செலுத்திவந்தார். எப்பொழுதும் அதை அருகிலேயே வைத்துக் கொண்டு அது விளையாடுவதைப் பார்த்துக் களித்து வந்தார். இவருக்கு வயது எண்பது ஆயிற்று. மரண காலம் நெருங்கிற்று. அப்பொழுதும் தம் கடைசிக் குழந்தையான நாராயணனையே எண்ணிக்கொண்டிருந்தார். இவரது உயிரைக் கவர மூன்று யமதூதர்கள் வந்தார்கள். நாராயண எண்ணத்தினால் அஜாமிளரின் கண்ணுக்கு இவர்கள் தென்பட்டார்கள். இந்தப் பயங்கர உருவங்களைப்

பார்த்த அஜாமிளர் தம் குழந்தை இவர்களைக் கண்டு பயப்படப்போகிறானே என்ற எண்ணங் கொண்டார்.

தொலைவில் விளையாடிக்கொண்டிருந்த தம் குழந்தையை அழைப்பதற்காக, 'ஏ நாராயணா!, என்று உரக்கக் கூப்பிட்டார். சாகும் தருணத்தில் நாராயண என்ற திவ்ய நாமத்தைச் சொன்னதனால் விஷ்ணு தூதர்களும் அங்கே ஓடி வந்தார்கள். உயிரைக் கவர வந்த யமதூர்களைத் தடுத்தார்கள். யமதூதர்கள் விஷ்ணு தூதர்களை நோக்கி, ''ஸ்வாமி! நீங்கள் யார்? நாங்கள் தர்மராஜாவின் கட்டளைப்படி இந்தப் பாவியின் உயிரைக் கவர வந்திருக்கிறோம். இவன் கொடிய பாவி. பெற்ற தாய்தந்தையரை வயது சென்ற காலத்தில் ஆதரிக்காமல் பரிதவிக்க விட்டவன். மிகச் சிறந்த அந்தணச் சரீரத்தைப் பெற்றும், குல ஒழுக்கங்களைத் துறந்து இழிவான செய்கைகளில் ஈடுபட்டவன். பிராம்மண சரீரமானது இகலோக வாழ்க்கையில் சுகம் அனுபவிப்பவதற்காக ஏற்பட்டதன்று. இகலோக சுகத்திற்காக அந்தணன் ஒருபொழுதும் உடலை வளர்க்கக் கூடாது. குளிர் மழை வெயில் முதலியவற்றைச் சகித்துக்கொண்டு விரதம் உபவாசம் தவம் முதலியவற்றினால் ஆன்மசக்தியை வளர்க்க வேண்டும். அந்தணர் பிறப்பு இகலோகத்தில் கஷ்டமநுபவிப்பதற்காகவும், பரலோகத்தில் பேரானந்தம் அநுபவிப்பதற்காகவுமே ஏற்பட்டது. ஆனால் இவனோ தனக்குக் கிடைத்தத மிக உயர்ந்த பிராம்மண ஜன்மத்தைத் தீய செய்கைகளினால் உடல் சுகத்தை அநுபவிப்பதற்காகவே கழித்தான். தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் செய்யாமல், உடற்சுகமே பெரிதெனக் கருதியதனால் இவன் பெரும் பாவியாகிறான். இவ்விதப் பாவிகளைப் பற்றி இழுத்துச் செல்ல எங்கள் தலைவர் எங்களைத்தான் அனுப்புவது வழக்கம். புண்ணியவான்களை அழைத்துச் செல்வதற்கு எங்கள் தலைவரே வருவது வழக்கம். எங்களைத் தடுக்கும் நீங்கள் யார்? நாங்கள் இதுவரை உங்களைப் பார்த்ததே இல்லையே!'' என்றார்கள்.

அதற்கு விஷ்ணு தூதர்கள், ''நீங்கள் தர்மராஜனின் தூதர்களாக இருந்தும், தர்மம் இது, அதர்மம் இது எனப் புரிந்துகொள்ளச் சக்தியற்றவர்களாக இருக்கிறீர்கள். இந்த அஜாமிளர் எவ்வளவு பாவியாக இருந்தாலும், புத்திரனைக் கூப்பிடும் வியாஜமாகப் பகவானுடைய திவ்ய நாமத்தை உச்சரித்தார். இதனால் தாம் செய்த பாவங்களிலிருந்து விடுபட்டுவிட்டார். ஆகையினால் இவரது உயிரை எடுத்துச் செல்லுவதற்கு நீங்கள் தகுதியற்றவர்கள். ஸங்கேதமாகவாவது பரிஹாஸமாகவாவது பகவானுடைய நாமத்தை உச்சரித்தால் அது ஸகல பாபங்களையும் போக்கும். மேலும், மிக ஆபத்தான

ஸமயங்களிலும், உயரமான இடத்திலிருந்து கீழே விழும்பொழுதும், கொடிய விஷ ஜந்துக்கள் கடிக்கும்பொழுதும், கடுமையான வியாதிகளால் பீடிக்கப்படும்பொழுதும் ஈசனது பெயரை மனங் கசிந்து கூறுபவர்கள் ஆபத்திலிருந்து விடுபடுகிறார்கள். மனு முதலிய மகரிஷிகள் பலவகைப் பாவங்களுக்கு பலவகைப் பிராயச்சித்தங்களை விதித்திருக்கிறார்கள். பெரும்பாலும் பாவங்கள், தவம், தானம், விரதம் முதலியவற்றினால் அழிந்தாலும், பாவத்தின் வாசனை மட்டும் அழிவதில்லை. வாசனை அழியாதவரையில் மனம் சுத்தமாவதில்லை. மனச்சுத்தியானது பகவானது பாதஸேவையினாலும், பகவானின் நாமங்களை தொடர்ந்து கூறுவதினாலும் கிடைக்கும். மேலான வீரியமுள்ள மருந்தைத் தெரிந்தோ தெரியாமலோ சாப்பிட்ட வியாதிஸ்தனுக்கு வியாதி எப்படி நிவிருத்தியாகிறதோ, அதுபோலவே தெரிந்தோ தெரியாமலோ பகவானின் பெயரைச் சொல்லுகிறவனுடைய எல்லாப் பாவங்களும் நாசமாகின்றன. இந்த விஷயத்தில் உங்களுக்கு சந்தேகம் தோன்றினால் உங்கள் தலைவனையே கேளுங்கள்'' என்று சொன்னார்கள்.

இதைக் கேட்ட யமதூதர்கள் யமனிடம் சென்றார்கள். அஜாமிளர் இவர்களுடைய ஸம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்தார். விஷ்ணு தூதர்களை மனத்தால் வணங்கினார்; ஏதோ சொல்ல விரும்பினார். ஆனால் விஷ்ணு தூதர்கள் மறைந்துவிட்டார்கள். அஜாமிளர் மனத்தெளிவடைந்தவராய், தாம் செய்த பாவச் செயல்களுக்காக மிகமிக வருந்தி, தமக்கும் உய்வு உண்டோ என ஏங்கியவராய், பகவானின் திருநாமங்களையே சொல்லிக் கொண்டிருந்தார். நாம ஜபத்தின் மகிமையால் மனமாசு அகன்றது. 'கங்காத்வாரம்' என்ற புண்ய ஸ்தலத்திற்குச் சென்றார். அங்குள்ள ஓர் ஆலயத்தில் யோகத்தில் அமர்ந்தார். மனத்தை பரமாத்மாவிடம் லயிக்கச் செய்தார். முன்பு பார்த்த விஷ்ணுதூதர்கள் இவர்முன் தோன்றினார்கள். அஜாமிளர் அவர்களை வணங்கினார். விஷ்ணு தூதர்கள் அஜாமிளரை நோக்கி, ''இதோ விமானம் வந்துள்ளது. ஸ்ரீ வைகுண்டத்திற்கு எழுந்தருள வேண்டும்'' என்று கூறினார்கள். அஜாமிளர் தமது உடலை கங்கை நதியில் உதறிவிட்டு ஸ்வர்ணமயமான விமானத்தில் அமர்ந்தார்; பரமபதம் அடைந்தார். எவ்வளவு தீய செயல்களைச் செய்தாலும் பகவானின் பெயரைக் கசிந்து கண்ணீர் மல்கி ஜபிப்பவன் பரிசுத்தமாகிறான். பகவந் நாமாவைவிட பாவத்தைப் போக்கி மனமாசுகளை அகற்றுவதற்குச் சிறந்ததும் சுலபமுமான ஸாதனம் நாமஸங்கீர்தனம் அல்லால் பிறிதொன்றுமில்லை.

<u>நல்லோரைக் கண்டான் அஜாமிளன். நல்வாழ்வு பெற்றான். தீய காட்சிகளும்</u> தீயோரிணக்கமும் தீயவையே பயக்கும்.

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

அக்காலத்தில் ஆன்மிகப் பத்திரிகைகள் மிகக் குறைவு. வார, மாதப் பத்திரிகைகள் அரசியல், சிறுகதை, நாவல், திரைப்படம், ஆன்மிகம் என்று எல்லாத் துறைகளுக்கும் பக்கங்களை ஒதுக்கி, அந்தந்த துறை சம்பந்தப்பட்ட விஷயங்களை வெளியிட்டு வந்தன. சில தனி நபர்கள் சில ஆன்மிகப் பத்திரிகைகளை நடத்தி வந்தனர். ஆனால் அவர்களால் அதிகப் பிரதிகளை வெளியிட்டு மக்களைச் சென்றடையச் செய்ய முடியவில்லை.

பெரியவாளுக்கும் நல்ல விஷயங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற அவா இருந்தது. அந்த சமயத்தில் ஆன்மிகம் இல்லாத விஷயங்களை பிரசுரிக்கும் சில மாதப் பத்திரிகைகளை நடத்துபவர்கள் மடத்திற்குச் சென்றால் அவர்களை ஆன்மீகப் பத்திரிகையாக நடத்தும்படி பெரியவா அவர்களை ஊக்கப்படுத்தி ஆசி வழங்கியதுண்டு. குண்டூசி என்ற பெயரில் சினிமா இதழ் நடத்தி வந்த ராதாகிருஷ்ணன் என்பவரிடம் பெரியவா ஆன்மிகப் பத்திரிகையாக நடத்தச் சொல்ல அவரும் ஆன்மிக மாத இதழாக மாற்றி நடத்தி வந்தார். அக்காலத்தில் மாலா, கலாவல்லி, கருமாரியம்மன் விஜயம், ராமகிருஷ்ண விஜயம், ஞானசம்பந்தம், ஓம்சக்தி என்று பல மாத இதழ்கள் வெளிவந்து நடந்து வந்தன. சில மடங்களில் சார்பாகவும் மாத இதழ்கள் வெளிவரத் தொடங்கின.

ஆனால் காமகோடி மடத்தின் சார்பில் எந்த மாத இதழும் வெளிவராத சூழ்நிலையில் பெரியவா ஒரு நாள் B.G. Paul & Co., என்ற பெயரில் பள்ளிப் புத்தகங்கள் வெளியிட்டு வந்த நீலகண்ட ஐயர் என்னும் அன்பரிடம் மடத்து சார்பில் ஒரு மாத இதழ் நடத்த முடியுமா? என்று கேட்டார். பெரியவா இப்படிச் சொன்னதும் அதை வேதவாக்காக ஏற்று உடனே அந்த அன்பரும் சரி என்றார்.

‘‘நான் சொல்லும் கட்டளைகளை ஏற்று அந்த வகையில் அந்த மாதப் பத்திரிகையை நடத்தமுடியுமா? என்று யோசனை செய் என்று பெரியவா சொன்னதும் அந்த அன்பர் வியப்பில் ஆழ்ந்தார்.

பெரியவா கூறிய கட்டளைகள்:

1) பெரியவா தான் இந்தப் பத்திரிகையை நடத்தச் சொன்னார் என்று யாரிடமும் சொல்லக் கூடாது.

2) யாரிடமும் விளம்பரங்கள் கேட்கக் கூடாது.

3) கடைக்கு விற்பனைக்காக அனுப்பக் கூடாது.

4) யாராவது விளம்பரங்களை அவர்களாகக் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம்.

5) சந்தாதாரர்களை நம்பியே பத்திரிகை நடத்த வேண்டும்.

மஹா பெரியவா விதித்த இத்தனை நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு 'ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்' என்ற பெயரில் ஒரு மாதப்பத்திரிகை பல வருடங்கள் அவர்களால் வெற்றிகரமாக நடந்தது. சில காலங்கள் கழித்து அரசாங்கமே பள்ளிப் பாட புத்தகங்களை வெளியிடத் தீர்மானித்தனர். அதனால் பள்ளிப் பாட புத்தகங்களை வெளியிட்டு வந்த அவர்கள் தொழில் பாதிக்கப்பட்டது. அவர்களுடைய வருமானம் குறைந்தது.

விளம்பரங்களே பத்திரிகையில் வெளியிடக் கூடாது என்று கட்டளை பிறப்பித்த பெரியவா, பிறகு மடத்திற்கு வரும் சில அன்பர்கள் மூலமாக விளம்பரங்களைச் சேகரித்து இவர்களுக்கு உதவியும் செய்தார்.

'ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்' என்ற பெயரில் மடத்து வெளியீடுகளையும் அவர்கள் பல வருடங்கள் வெளியிட்டார்கள். 1931ஆம் ஆண்டு பெரியவா சென்னைக்கு விஜயம் செய்தபொழுது ஆற்றிய அருள் உரைகள் மிகவும் அழகாகப் பிரசும் செய்ததோடு 'ஸ்ரீ ஜகத்குரு திவ்ய சரித்திரம்' என்ற பெயரில் 1957ஆம் ஆண்டு பெரியவாளின் வரலாற்றையும் வெளியிட்டுச் சிறப்பித்தார்கள். இதை எழுதியவர் பெரியவாளின் பூர்வாச்சிரம சகோதரர் சாம்பமூர்த்தி சாஸ்திரிகள்.

தற்பொழுது 'ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்' ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தின் ஆதரவில் வெளிவருகிறது.

- ஸ்ரீ மகாபெரியவா மகிமை